PARAPARAPPU CHEITHI
Tamil Fortnightly

# பரபரப்பு செய்தி

மாதமிருமுறை இதழ்
புலனாய்வு இதழ்களில் புதிய பரிணாமம்

Volume : 27 ● Issue : 20 ● 2026 January 16-31 ● மலர் - 27 ● இதழ் - 20 ● 2026 ஜனவரி 16-31 ● ₹15



விஜய் கூட்டணி...
டிடிவிக்கு துணை முதல்வர் பதவி..!



## 144 தொகுதிகளில் திமுக போட்டி..!

- இணையும் பெரிய பா.ம.க.
- துணைக்கு தே.மு.தி.க.

# விஜய் கூட்டணியில் தினகரனுக்கு துணை முதல்வர் பதவி..!

## ● தென் மாவட்டங்களில் அதிக சீட்..!

## ● பதற்றத்தில் பழனிசாமி.!!

**ஓ.பி.எஸ் டி.டி.வியை இணைப்பீர்களா என்ற கேள்வியை முன்னாள் அமைச்சர் ஜெயகுமாரிடம் நிருபர்கள் கேட்ட போது, அவர் அதெல்லாம் முடிந்து போன கதை! என்று லாலி பாடும் ஜெயக்குமார், வெயிட் அண்ட் சீ என்று சமரசமாகப் பேசுகிறார்.**

*முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வனோ, விரைவில் மகிழ்ச்சியான செய்தி வரும் என்கிறார்.*

*யாரும் எதிர்பாராத விதத்தில் செங்கோட்டையன் விஜய் கட்சியில் சேர்ந்து விடவே பழனிசாமி வகையறா பதற்றத்தில் உள்ளது.*

*இந்நிலையில் சசிகலாவை பழனிசாமியின் மகன் மிதுன் சந்தித்ததாக தகவல்கள் கிடைக்கின்றன.*

*இது இப்படியிருக்க...*



*2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.கவை வீழ்த்துவதை விட எடப்பாடி பழனிச்சாமியை தோல்வியடைய செய்வதுதான் டி.டி.வி.தினகரன், ஓ.பன்னீர் செல்வத்தின் கணக்காக இருக்கிறது. இதற்காக தமிழக வெற்றி கழகத்துடன் டீல் பேசியிருக்கிறார் டி.டி.வி. தஞ்சாவூர், தேனி, மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் ஓ.பி.எஸ், டி.டி.விக்கு அதிக தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*


*2026 சட்டமன்றத் தேர்தல் எடப்பாடி பழனிச்சாமிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் படுதோல்வியை சந்தித்து வருவது அவர் மீதான விமர்சனத்தை அதிகரித்துள்ளது.*

*2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், நகர்ப்புற ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள், இடைத்தேர்தல்கள், 2024 மக்களவைத் தேர்தல் என எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் தோல்வியே மிஞ்சியது.*


விஜய்


நயினார் நாகேந்திரன்


ஓபிஎஸ்


ஜெயக்குமார்


வைகைச்செல்வன்


சசிகலா

பா.ஜ.கவின் திட்டமோ வேறு மாதிரியாக இருக்கிறது. அதாவது 2021 சட்டமன்ற தேர்தல் மற்றும் இடையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் பா.ஜ.க அ.தி.மு.கவுடன் இருந்த கட்சிகளை ஒரே கூட்டணிக்குள் கொண்டு வர வேண்டும் என்பதுதான். குறிப்பாக முக்குலத்தோர் வாக்குகளை குறிவைத்து ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் ஆகியோரை கூட்டணிக்குள் கொண்டுவர பா.ஜ.க தீவிரமாக காய் நகர்த்தி வருகிறது.

ஆனால் எடப்பாடி பழனிச்சாமியை வீழ்த்த வேண்டும் என்பதுதான் எங்கள் திட்டம், அதற்காக தி.மு.கவுடன் கூட கைகோர்க்க தயார் என சொல்லி வருகின்றனர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள். அதனால் தான் தனது தொண்டர்கள் மீட்பு குழுவை கழகமாக மாற்றி இருக்கிறார். இதற்கிடையே பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் நடத்திய ஆலோசனை தி.மு.கவுடன் சேரலாமா? தமிழக வெற்றிக்கழகத்துடன் சேரலாமா? என இரு கேள்விகள் மட்டுமே முன்வைக்கப்பட்டது. இதன் மூலம் அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணியில் ஓ.பி.எஸ் சேரப்போவதில்லை என்பது உறுதியாகி இருக்கிறது.

இது ஒரு புறம் இருக்க டி.டி.வி.தினகரன் என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்பதுதான் அனைவரின் எதிர்பார்ப்பாக இருந்தது. அவரும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறிய நிலையில் தொடர்ந்து விஜய் கட்சியுடன் கூட்டணி அமைப்பதையே இலக்காக கொண்டு செயல்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில் தமிழக வெற்றி கழகத்துடன் முதற்கட்ட பேச்சு வார்த்தைகள் தொடங்கி இருக்கும் நிலையில் செங்கோட்டையனிடம் சில டிமான்டுகளை டி.டி.வி.தினகரன் முன் வைத்திருப்பதாக சொல்லப்படுகிறது.

அதாவது 2026 சட்டமன்ற தேர்தலில் கூட்டணி வைத்தால் துணை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும், தஞ்சாவூர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தனக்கும் ஓ.பன்னீர்செல்வத்திற்கும் அதிக தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்பதுதான். சொல்லப்போனால் தென் மாவட்டங்களில் முக்குலத்தோர் வாக்குகள் கணிசமாக உள்ளது. மேலும் டெல்டா மாவட்டங்களிலும் சசிகலா, டி.டி.வி.தினகரன் ஆகியோருக்கு நல்ல செல்வாக்கு உள்ளது. அங்கு தமிழக வெற்றி கழகம் சற்று வீக்காக இருக்கும் நிலையில் ஓ.பி.எஸ், டி.டி.வி ஆகியோரை வைத்து சமாளித்து விடலாம் என்பது தான் விஜயின் திட்டம். இதனால் டி.டி.வி.தினகரனின் முன்மொழிவுக்கு தமிழக வெற்றிக் கழகம் சம்மதம் தெரிவித்து விட்டதாகவே சொல்லப்படுகிறது. விரைவில் இது தொடர்பான பேச்சு வார்த்தைகளும் இறுதி செய்யப்பட்டு பொங்கலுக்கு பிறகு கூட்டணி தொடர்பான இறுதி அறிக்கைகள் வெளியாகலாம் என்கின்றனர்.

இவையெல்லாம் இப்படி சென்று கொண்டிருக்க... தமிழக பா ஜ.க தலைவர் நயினார் நாகேந்திரன்.. தேர்தல் க்ளைமேக்ஸின் போது 24 மணி நேரத்தின் முன்னர் கூட கூட்டணிகள் அமையும்.மாறும்! என்று சொல்கிறார்.

புத்தாண்டில் புதுக்கூட்டணிகள் உருவாக வாய்ப்புகள் அதிகம்! ■

அரசியல் | குமரகுரு

# 144 தொகுதிகளில் திமுக போட்டி..!

## ❖ இணையும் பெரிய பா.ம.க.!!

## ❖ துணைக்கு தே.மு.தி.க.!!



**அ.தி.மு.கவில் ஓ.பி.எஸ்ஸும், டி.டி.வியும் ஒன்றிணைக்கப்படுவார்கள் என்று பல காலமாக பேச்சு நடக்கிறது. ஆனால், அது நடப்பதாக சில சிக்னல்கள் வருகிறதே தவிர அதுவும் எடப்பாடியால் முறியடிக்கப்படுகிறது. அவரைத்தேடி அவருக்கு சாதகமாகவே ஏற்கெனவே இருந்த மத்தியஅமைச்சர் ஃபியூஸ் கோயல் கூட்டணி பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படுகிறார். அடுத்ததாக மத்திய அமைச்சர் நிர்மலாசீத்தாராமனை எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் ஆகியோர் சென்று சந்திக்கிறார்கள்.**

அதற்கு முன்பாகவே தமிழக பா.ஜ.க தலைவர் நயினார் நாகேந்திரன் டெல்லிக்கு அழைக்கப்படுகிறார். அவர் டெல்லி செல்வதற்கு முன் எடப்பாடியைச்சந்தித்து விட்டுதான் செல்கிறார். 80 தொகுதிகளை நயினார் கேட்டதாகவும் 40 தொகுதிகளை தருவதாக எடப்பாடியார் தரத்தயார் என்றும் பேச்சு ஓடுகிறது. இந்த நிலையில் ஆடிட்டர் குருமூர்த்தி டெல்லி சென்ற மறுநாளே ஓ.பி.எஸ் அமித்ஷா சந்திப்பு நடந்ததால் ஓ.பி.எஸ் + டி.டி.வி இணையப்போகிறார்கள் என்று ஊடகங்களில் செய்திகள் ஓடத்துவங்கி விட்டது.

அதன்பிறகு அமித்ஷா டிசம்பர் 11ல் வருகிறார்.... 15ந்தேதி வருகிறார்... இல்லையில்லை 21ந்தேதி வருகிறார்... என்றாகி தற்போது அதுவுமில்லை ...என்று அமைதியாகி விட்டது. ஆனால் லேட்டஸ்ட்டாக ஜனவரி 9ந்தேதி அமித்ஷா வருகிறார் ஆபரேஷன் செய்ய வருகிறார் என்று பேச்சிருக்கிறது. இதனால் தனது இறுதி முடிவை ஓ.பி.எஸ் வரும் டிசம்பர் 23 அன்று அறிவிக்க இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

அமித்ஷா வருகை தள்ளிப்போவதால் டிசம்பரில் ஓ.பி.எஸ் எந்த முடிவும் எடுக்க மாட்டார் என்று சொல்கிறார்கள்.



இபிஎஸ்



ஓபிஎஸ்



சசிகலா



டிடிவி தினகரன்

பிப்ரவரியில் கூட்டணி குறித்து தெரிவிப்போம் என கூறியுள்ளார்.

ஓ.பி.எஸ், டி.டி.வி அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணியில் இணைவார்களா? அல்லது எடப்பாடியை ஒழிக்க தி.மு.க கூட்டணியில் இணையப்போகிறார்களா? என்று பிரபல பத்திரிகையாளர் ஒருவரிடம் பேசினோம். அவர் நம்மிடம், தி.மு.க கூட்டணியில் ஓ.பி.எஸ் மற்றும் டி.டி.வி வருவதை உறுதிசெய்து விட்டார்கள். ஓ.பி.எஸ்ஸுக்கு 5 சீட், டி.டி.விக்கு 4 சீட் மற்றும் ஒரு எம்.பி சீட் என்றும், ராமதாஸின் பெரிய பா.ம.கவுக்கு 20 தொகுதிகள், தே.மு.தி.க.விற்கு 4 சீட்கள் என்றும், கேட்கும் நிதியும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். தனியரசு, தமிமுன் அன்சாரி, கருணாஸ் அணிகளுக்கு தலா ஒரு சீட், ம.தி.மு.க.வுக்கு 5 சீட் என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. திருமாவளவனுக்கு 6 சீட், காங்கிரஸுக்கு 20 25, கம்யூனிஸ்ட்களுக்கு தலா 2 என முடிவாகும். கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்குவது போக, 144 தொகுதிகளில் தி.மு.க போட்டியிடுவது உறுதியாகி விட்டது! என தெரிவித்தார்.

நாம் அ.ம.மு.க தரப்பில் கேட்ட போது, எடப்பாடி முதலமைச்சர் வேட்பாளர் என்று அமித்ஷா இதுவரை சொல்லவில்லை. அவர் அப்படி சொன்னாலும் நாங்கள் அதனை ஏற்கப்போவதில்லை. எடப்பாடி துரோகி! துரோகியை முதல்வராக்க நாங்கள் கட்சி நடத்தவில்லை. அமித்ஷாவின் முடிவு என்ன என்று தெரிந்தவுடன் நாங்கள் உடனடியாக முடிவெடுப்போம். அமித்ஷாவும் எடப்பாடியும் அன் கோ வாகி விட்டால் அ.ம.மு.கவுக்கு இரண்டே இரண்டு வழிகள்தான் உள்ளது. ஒன்று விஜய்யுடன் இணைவது, அல்லது தி.மு.கவுடன்கூட்டணி வைப்பது. இந்த இரண்டும் சரியாக அமையாவிட்டால் தனித்துப்போட்டியிட்டு எடப்பாடியை தோற்கடிப்போம்! என ஆவேசமாக கூறினார்.

நாம் அரசியல் விமர்சகர் ஒருவரிடம் பேசினோம். அவர் நம்மிடம், ஓ.பி.எஸ்ஸுக்கு மீண்டும் அ.தி.மு.கவில் உரிய அங்கீகாரம் கிடைத்தால் மட்டுமே அவர் இணைவது குறித்து


பரபரப்பு செய்தி

வெளியிட்டாளர் & ஆசிரியர்
**S.P.இராமநாதன்**
**99405 14136**

இணையாசிரியர்
**ஜோதி சங்கர் .A**
**9444703555**

பொறுப்பாசிரியர்
**நா.இராதாகிருஷ்ணன்**

நிருபர்கள்
**ஜேம்ஸ் நெப்போலியன்**
**இராமநாதபுரம் முஸ்தபா**
**பொங்கு செல்வம்**
**தனசேகர்**
**V.சங்கர்**
**V.செல்வநாயகம்**
**K.மணிகண்டன்**
**குமரிமைந்தன்**
**பாக்யா**
**வினாயகம்**

வடிவமைப்பு
**த.கோபாலகிருஷ்ணன்**

நிர்வாக அலுவலகம்
**கதவு எண்: 7/31, A - பிளாக்,**
**நெ.69, கிரிஸ்டல் கோர்ட்,**
**அண்ணா நகர்**
**சென்னை - 600 101**

தொடர்புக்கு
**044 - 26150095**

மின்னஞ்சல்
paraparappuseithiweekly@gmail.com

www.paraparappucheithi.com
paraparappucheithi
paraparappucheithi


அமித்ஷா


ஆ.பி.உதயகுமார்


ஜெயபிரதீப்


ஆடிட்டர் குருமூர்த்தி

ஒப்புக்கொள்ள வேண்டும். அதை விடுத்து எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் சேர்ந்தால் அந்த மானங்கெட்ட பிழைப்பு தேவையில்லையென்று தென் மாவட்ட முக்குலத்தோர்கள் வேகமாக பேசுகிறார்கள். ஆனால் ஜனவரி 9 ந்தேதிக்குப்பிறகுதான் ஓ.பி.எஸ் நல்ல முடிவைத்தெரிவிப்பார் என நம்புகிறேன். ஏனென்றால் அவரை இயக்குவது ஆடிட்டர்தான். அவர்தானே அமித்ஷாவை சந்திக்க வைத்தார்! என்று சொன்னார்.

நாம் டெல்லி கில்லி ஒருவரிடம் நிலைமை என்னாகும் எனக்கேட்டதும் அவர் நம்மிடம், ஓ.பி.எஸ், டி.டி.வி முதலில் ஒன்றாக வேண்டும். அல்லது இருவரும் ஒரே முடிவில் இருக்க வேண்டும். மேலும் இவர்களிருவரும் அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணியில் சேர்ந்தாலும் உட்குத்து நடக்கும் என்று அவர்களுக்கே தெரியும் என்பதால் கூட்டணி என்பது சரியாக இருக்காது. கடைசியாக ஒரு வேளை... அவர்கள் வேறு வழியே இல்லாமல் தி.மு.க கூட்டணியில் சேர்ந்தால் அவர்கள் வேண்டுமானால் வெற்றி பெறலாம். அமைச்சர்களாகலாம். ஆனால் தொண்டர்கள் அவர்களுடன் இருக்க மாட்டார்கள். இந்நிலையில் நான் வேறொரு விஷயம் கேள்விப்பட்டேன். அதாவது, ஓ.பி.எஸ்ஸின் மகன் விரைவில் பா.ஜ.க விலோ அல்லது த.வெ.க விலோ இணைந்து விடுவேன் என அவரது அப்பாவிடமே சொல்லி விட்டாராம்! என்று அதிரடி சரவெடி வெடித்தார்.

கூட்டணிகள் எப்படி அமைந்தாலும் திருமங்கலம் தொகுதியில் ஆர்.பி. உதயகுமாரை எதிர்த்து ஓ.பி.எஸ்ஸின் இளைய மகன் ஜெயபிரதீப் போட்டியிட வைக்கப்படுவார் என்று விவரமறிந்தவர்கள் சொல்கிறார்கள். அதே திருமங்கலம் தொகுதியில் தே.மு.தி.க.வின் சார்பில் எந்தக்கூட்டணியில் இணைந்தாலும் பிரேமலதா அல்லது விஜயபிரபாகரன் போட்டியிடும் பட்சத்தில் உதயகுமாரின் நிலை பரிதாபத்தில் முடியுமென கதைக்கிறார்கள். ஏனென்றால் உதயகுமாருக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பி விட்டது என்கிறார்கள்.

நிலைமை இப்படி இருக்க, டி.டி.வி. தினகரனிடம் நிருபர்கள் அ.ம.மு.கவிற்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் 6 சீட் உறுதியாமே என்று கேட்டபோது, அவர் 6 சீட்டா என்று அவருக்கே உரிய பா ணியில் நக்கலாக சிரித்து விட்டு போனார். அவர் தை மாதத்தில் தனது முடிவை அறிவிக்கவிருக்கிறார். அவர் இரட்டை இலக்கத்தில் சீட்டுகளை எதிர்பார்க்கிறார். விஜயை இரண்டாவது ஆப்ஷனாகவே வைத்துள்ளார்.

எது எப்படியிருந்தாலும் தி.மு.க தனது கூட்டணியை ஸ்ட்ராங்காகவே வைத்திருப்பதாலும், ஓட்டுக்கு அதிகளவில் செலவழிக்க தயாராகி விட்டதாலும் ஐ யாம் ஏ காம்ப்ளான் பாய்! என்றே கம்பீரமாக களத்தில் பாய தயாராகவே உள்ளது.

டெய்ல்பீஸ்: தி.மு.க கூட்டணி சகலவிதத்திலும் பலமிக்கதாக இருக்கிறது. அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணி பலவீனம் அதிகமாக உள்ளது. இந்நிலையில் சசிகலா என்றொரு சக்திமிக்க பெண்மணி என்ன இந்த பொம்பளை அமைதியாகவே இருக்கேன்னு நினைக்குறீங்களா? வெயிட் அண்ட் சீ என்று சொல்லி மறைமுகமாக பல வேலைகளில் ஈடுபட்டு வருவதால், ஜனவரி இரண்டாவது வாரத்தில் சில அதிரடி ஆக்ஷன்கள் வருமென்று பவர் சென்டர்கள் கூறுகிறார்கள்.

ஏனென்றால் அடுத்து வரும் தேர்தலில் பெண்தான் தமிழகத்தை ஆளப்போகிறார் என்று பஞ்சாங்கங்களும் பலமான ஆச்சார்யார்களும் உறுதியாக சொல்கிறார்கள்.

அரசியலில் எதுவும் நடக்கலாம்! ■



திண்டுக்கல் | நமது நிருபர்

## கனிமவள மாஃபியாவால் சிக்கல்..!

# அமைச்சரை ED-யிடம் சிக்க வைக்கத் துடிக்கும் ராஜப்பா..!

**தமிழ்நாட்டின் கனிம வளங்கள், கனிமவளக் கொள்ளை மாஃபியாக்கள், ரவுடிகள், அதிகாரிகள் பிடியில் சிக்கித் தவிக்கிறது. இந்நிலையில் கனிமவளக் கொள்ளைக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே பொறுப்பேற்க வேண்டும் என்றும், கனிம வளங்கள் மாஃபியாக்கள் கையில் மாட்டிக்கொண்டுள்ளது என்றும் சென்னை உயர்நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளது.**

திண்டுக்கல் மாவட்டத்தில் பகல்கொள்ளையாக நடந்து கொண்டிருக்கிறது கனிமவளக்கொள்ளை. சுங்கத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்களுக்கு பலபுகார்கள் சென்றும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவே இல்லை. ஆனால், மாஃபியா கூட்டங்களுக்கு கொள்ளையடிக்க அதிகாரிகளே சிவப்பு கம்பளம் விரித்து வருவதுதான் கொடுமையின் உச்சம்.

பிரபல மணல் தாதா புதுக்கோட்டை எஸ்.ஆர் காலம் முடிந்துவிட்டது. இனி நான்தான் மணலுக்கும், கிராவல் தொழிலுக்கும் ராஜா என மார்த்தட்டி வருகிறார் மயிலாடுதுறை ராஜப்பா. மணலில் கொடிகட்டி பறந்த கறம்பக்குடி கரிகாலன், புதுக்கோட்டை எஸ்.ஆர், திண்டுக்கல் ரத்தினம், உள்ளிட்டோர் மணலின் படு பாதாளம் வரை பாய்ந்து பணத்தை பார்த்து சம்பாதித்து ஓய்ந்து விட்டனர். தற்போது மீண்டும் மணல், கிராவல் மண் பற்றிய ஆய்வுக்கு வந்திருக்கிறார் மயிலாடுதுறை ராஜப்பா.

இவரது தலைமையில் செம்மண், மண், மணல் என நாள் தோறும் திண்டுக்கல் மாவட்டத்தில் கனிமவளக் கொள்ளை ஜரூராக நடக்கிறது. அரசு அனுமதி பெறாமல் நாள்தோறும் சுமார் ரூபாய் 2 கோடி மதிப்பிலான மண், மணலை வாரிச் சுரண்டுகின்றனர். இதைத்தடுக்க வேண்டிய கனிம வளத்துறை கைநீட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. அனைத்துத் பொறுப்பும் வகிக்கக்கூடிய மாவட்ட ஆட்சியரும் கண்டுகொள்வதேயில்லை. விவசாய பயன்பாட்டிற்கு என்று போலியாக உத்தரவு பெற்றுக்கொண்டு, எந்த விவசாயம் நிலத்திலும் எடுக்கப்பட்ட மண்ணை கொட்டாமல், ரியல் எஸ்டேட் பிளாட்களுக்கு மண்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் சூத்திரதாரி மயிலாடுதுறையைச் சேர்ந்த ராஜப்பா தான் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல் மாவட்டங்களில் கனிம வளங்களை கொள்ளையடிப்பதில் தனி ராஜாங்கமே நடத்தி வருகிறார் ராஜப்பா. தமிழக அரசிடம் இருந்து மணல் குவாரி காண்டிராக்ட் பெற்றுத்தருவதாக பல பேரிடம் கோடிக்கணக்கில் பணம் வசூல்

செய்துள்ளதாக ஏற்கனவே ராஜப்பா மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள். இதற்காக சென்னையில் ஓம் சக்தி என்ற பெயரில் அலுவலகம் போட்டு தமிழ்நாடு முழுவதும் பண வசூல் வேட்டை நடத்துவதாகவும் தகவல்.


ராஜப்பா

திண்டுக்கல் மாவட்டத்தில் அரசியல் புள்ளிகளையும், அதிகாரிகளையும் கைக்குள் போட்டுக்கொண்டு மாதம் ரூபாய் 60 கோடி மதிப்பிலான கனிமத்தை கொள்ளையடித்து வருகிறாராம் ராஜப்பா. இதனால் அரசுக்கு பல கோடி வருமானம், நூற்றுக்கணக்கான இழப்பு. இதைத்தட்டிக் கேட்க வேண்டிய மாவட்ட ஆட்சியர் சரவணன் சத்தமே இல்லாலம் இருக்கிறார். அவரும் இந்த மணல் கொள்ளைக்கு உடந்தையா என சந்தேகத்தை கிளப்புகின்றனர் சமூக ஆர்வலர்கள். மேலும், கனிமவளத் துறை திண்டுக்கல் மாவட்ட உதவி இயக்குநர் செல்வசேகரனும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது, வேலியே பயிரை மேய்ந்த கதையாக இருக்கிறது. காரணம் அவர்களுக்கும் ஸ்வீட் பாக்ஸுகள் லஞ்சமாக தாராளமாகச் செல்வதால் அவர்கள் எதையும் கண்டுகொள்வதே இல்லை என்கிறார்கள்.

ஒட்டன் சத்திரம், நிலக்கோட்டை, ஆத்தூர், வேடசந்தூர் தாலுக்காக்களில் இரவும், பகலும் கனிமங்கள் கொள்ளையடிக்கப்பட்டு வருகிறது. அணைப்பட்டி, குருவித்துறை, அணைப்பட்டி ஆஞ்சிநேயர் கோயில் அருகில், வத்தலகுண்டு பிரதான சாலை நிவின் பேக்கரி அருகில், மேட்டூர் ஆகிய இடங்களில் மணல் கொள்ளை நடைபெற்று வருகிறது. ஆத்தூரில் செம்பட்டி, நிலக்கோட்டை சாலையில் சத்திரம், பிரான்பட்டி, தருமத்துப்பட்டி, பஞ்சம்பட்டிகுளம், மல்லையாபுரம் ஆகிய இடங்களில் கனிமவளக்கொள்ளை நடைபெறுகிறது.

வேடசந்தூர் தாலுகா வடமதுரையில், தென்னம்பட்டிகுளம், பெரியகுளம் கம்பிளியம்பட்டி, பிலாத்து, பேர்நாயக்கன்பட்டி, எக்ஸ் எம்.எல்.ஏ தோட்டத்து பின்புறம் ஆகிய இடங்களில் கொள்ளையடிக்கிறார்கள். ரெட்டியார் சத்திரத்தில் தருமத்துப்பட்டி, கோம்பை, சாணார்பட்டி, எம்.அம்மாபட்டி, கோவிந்தாபுரம், பண்ணைப்பட்டி, கருப்பிமடம், கன்னிவாடி, முத்தனம்பட்டி, கே.புதுக் கோட்டை, புதுப்பாலம், கதிரையன் குளம் ஆகிய இடங்களிலும் கனிம வளங்களை வாரிக் குவிக்கிறார்கள்.

ஓட்டன்சத்திரம் தாலுகாவில் கரட்டுப்பட்டி தாளையூத்து, விருப்பாட்சி, சத்திரப்பட்டி, வெறியப்பூர், அரசு பண்ணைப்பட்டி, சாட்டைப்புதூர் கள்ளிமந்தையம், பெரியகோட்டை, இடையகோட்டை, காளாஞ்சிப்பட்டி, ஆர்.பி.புதூர், ஓடைப்பட்டிபுதூர் ஆகிய இடங்களில் லாரி லாரியாய் கனிம வளங்களை குவிக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, பொதுமக்களுக்கு தரமான மணல் கிடைப்பதில்லை. அதனால், மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மண்ணை மணலாக்கும் சலவை தொழிற்சாலையான வாஷிங் யூனிட் பல இடங்களில் இயங்கி வருகிறது. ஒரு சில வாஷிங் யூனிட் பிளான்ட் தவிர அனைத்துக்கும் அரசு பெர்மிட் கிடையாது. ஆங்காங்கே ஸ்டாக் யார்டும் வைத்து பெருமளவில் சட்ட விரோத செயலில் ஈடுபட்டு தொழிலை நடத்தி வருகின்றனர். ஆற்று மணல் கிடைக்காததால் வேறு வழியின்றி இந்த மணல்களை வாங்கி கட்டுமானத் தொழில் நடைபெற்று வருகிறது.

கோவிலூர் உட்பட 13 இடங்களில் இந்த மணல் வாஷிங் யூனிட் படுஜோராக நடைபெற்று வருகிறது. இந்த மணல் வாஷிங் யூனிட்களை முப்புலியன், திருமால், கண்ணன் போன்றவர்கள் சட்டவிரோதமாக நடத்தி வருகின்றனர். சட்ட மன்றத்தேர்தல் நெருங்கும் நேரத்தில் அதற்கான செலவுக்கு பணத்தை இப்படியெல்லாம் கொள்ளையடித்து சேர்த்து வருகிறார்களாம். கடிவாளம் போட வேண்டிய கலெக்டர் பிரவீன்குமார் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்? என கேள்வி எழுப்புகின்றனர் சமூக ஆர்வலர்கள்.

மேலும், கனிம வளத்துறை அதிகாரிகள் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்து வருகின்றனர். அவர்கள் மீது லஞ்ச ஒழிப்புத்துறையோ, வருமானவரித்துறையோ அல்லது அமலாக்கத்துறையோ ரெய்டு நடத்தினால், பலபேர் கொத்தாக சிக்குவார்கள் என்கிறனர் சமூக ஆர்வலர்கள்.

கனிவள கொள்ளையில்முடிசூடா மன்னனாக கொடிகட்டி பறக்கும் இந்த ராஜப்பா யார்..?

இரண்டு ஆண்டு காலமாகவே குவாரிப்பணியை எடுப்பதற்கு தமிழக அரசின் கிச்சன் கேபினட், மருமகன் மூலம் முயற்சிகளை மேற்கொண்டார் ராஜப்பா. அதற்கு முன்னேற்படாக முதன் முதலில் கிராவல், சவுடு மண் எடுப்பதற்கு அவருக்கு அனுமதி கிடைத்தது. இந்நிலையில் மணல் ராஜப்பா மயிலாடுதுறை, கடலூர், சிவகங்கை, திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தஞ்சாவூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல இடங்களில் கிராவல் தொழிலை நடத்தி அதன் மூலம் வரும் வருமானத்தை மேலிடத்திற்கும், அரசு அதிகாரிகளுக்கும் பங்கு

போட்டு வருகிறார். மயிலாடுதுறை செம்பனார்கோவிலை சேர்ந்தவர் ராஜப்பா. ஜெயலலிதா ஆட்சியில் எஸ்.ஆர்.கருப்பணன் என்கிற ஐ.ஏ.எஸ் இருந்தார். அவரது மகன் குமார் என்பவர் மூலமாக கிராவல் மண் தொழிலை ஆரம்பித்துள்ளார். கடந்த 2006 முதல் 2011 தி.மு.க ஆட்சி காலத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் கிராவல் மண் அள்ளும் உரிமம் பெற்றிருந்த மணல் மார்ட்டின் வழியாக, தலைமைக்கு அறிமுகம் ஆனவர் தான் ராஜப்பா. அதன் பின்னர், ஆறுமுகச்சாமியுடன் இணைந்து தொழில் நுணுக்கங்களை கற்று தேர்ந்துள்ளார். அவரிடமிருந்து பிரிந்து ஒரு சில குவாரி காண்டிராக்ட்களை பெற்று தொழில் நடத்தி வந்திருக்கிறார். இந்த வகையில், தலைமையின் மகள் குடும்பத்தின் மருமகனான டாக்டர் ஒருவரின் நட்பை பெற்றிருக்கிறார். அந்த நட்பை காட்டியே பலரிடம் வசூல் வேட்டையை நடத்தி வருகிறார். அதனை தொடர்ந்த, அ.தி.மு.க ஆட்சி காலத்தில் சசிகலாவின் உறவினர், மயிலாடுதுறைக்காரன் என்ற அடையாளத்தை வைத்து தொழிலை தொடர்ந்திருக்கிறார். தனியே குவாரி உரிமம் எடுத்து தொழில் செய்ததைவிட, எனக்கு மேலிடத்தில் அவரைத் தெரியும் இவரைத் தெரியும். அவரை வைத்து நான் இன்ன காரியத்தை முடித்துத் தருகிறேன் என ஹைடெக் புரோக்கராக செயல்படுவதில் ராஜப்பா கில்லாடி என்கிறார்கள்.



மாவட்ட ஆட்சியர் செ.சரவணன்

அ.தி.மு.கவின் எடப்பாடி ஆட்சி காலத்தில், எடப்பாடியாருக்கு எல்லாமுமாக இருந்த ஆத்தூர் இளங்கோவனின் முக்கிய கூட்டாளியான திண்டுக்கல் சுகுமார் வழியாக, அவரது பெயரை சொல்லியே பலகோடி ஆட்டையை போட்டிருக்கிறார் ராஜப்பா. தமிழகத்தின் ஏதோ ஒரு மாவட்டத்தின் ஆற்று மணல் அள்ளும் உரிமத்தை பெற்றுத் தருகிறேன் எனக்கூறி ஒருவரிடம் பேரம் பேசி காசை வாங்கிவிடுவது. பார்ட்டியிடம் வாங்கிய காசில் ஒரு பகுதியை திண்டுக்கல் சுகுமார் வழியாக மேலிடத்துக்கும் சேர்த்துவிடுவது. இதேபோல, ஒரு இடத்துக்கு பலரிடம் பணத்தை வாங்கிவிடுவாராம். பின்னர், பணம் கொடுத்தவர்கள் நெருக்கினால், இதோ அமைச்சர் வீட்டில்தான் இருக்கிறேன். முதல்வர் வீட்டில்தான் இருக்கிறேன். கட்சி தலைமை அலுவலகத்தில் இருக்கிறேன். உங்கள் விசயமாகத்தான் பேச வந்திருக்கிறேன் என்பதாக செல்ஃபி எடுத்து போட்டு கதைவிடுவாராம்.

முதல்வர் இல்லத்திலேயே அவர் காத்திருந்தாலும், அவர் என்ன சோலியாக காத்திருக்கிறார் என்பது எவருக்கும் தெரியாது. ஆனால், அந்த நேரத்தில் எவர் அழைத்தாலும் அவர் வேலையாகத்தான் வந்திருக்கிறேன் என்பதாக அள்ளிவிடுவாராம்.

கொஞ்சம் நெருக்கடி கொடுத்து நெருக்கினால், இதுல ஆயிரம் பார்மாலிட்டிஸ் இருக்கிறது. எத்தனை பேர் போட்டி போடுறான் தெரியுமா? கோர்ட் ஆர்டர் இருக்கிறது. எல்லாம் சரி செஞ்சி தருணம் பார்த்துதான் உரிமம் கொடுப்பாங்க. இதையெல்லாம் ரெடி பண்ணிதான் கொடுக்க முடியும். கொஞ்சம் பொறுத்துதான் ஆகனும் என்று அதற்கும் ஒரு விளக்கம் கொடுப்பாராம், ராஜப்பா.

இதுபோல, ஏதோ ஒரு டீலிங்கில் தெரியாத்தனமாக மாட்டிக்கொண்ட, தலைநகர் வணிகவீதியில் மூன்றெழுத்து பெயரில் உணவகம் நடத்திவரும் தொழிலதிபர் ஒருவர் ஒரு காரியத்தை முடித்து தருவதற்காக காசை கொடுத்துவிட்டு, அந்த காரியமும் நிறைவேறாமல் கொடுத்த காசையும் திரும்ப வாங்க முடியாமல் நொடிந்தே போய்விட்டாராம். இன்னொரு மாவட்டத்தை சேர்ந்த ஒருவர், கொள்ளிடம் ஆற்றங்கரையோரம் ஒரு ரீச் கேட்டு ஒரு கோடி ரூபாயை கொடுத்திருக்கிறார். ஆற்றில் மணல் அள்ளுவது; லாரியில் ஏற்றுவது, யார்டில் இறக்குவது ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய லிப்டிங் காண்டிராக்ட் திண்டுக்கல் சீனிவாசனின் அண்ணன் மகன் ராஜசேகரிடம் இருந்த சமயத்தில் நடந்த பஞ்சாயத்து இது. ராஜப்பா கொடுத்த வாக்குறுதியின்படி, சொன்ன வேலை நடக்காமல் போகவே, காசை திரும்பக் கேட்டதற்கு அவரும் திமிராக பேச கை கலப்பாகி முடிந்தவரை வசூலித்துவிட்டு கிளம்பியிருக்கிறார் அந்த நபர்.

அ.தி.மு.க ஆட்சி முடிந்து, தி.மு.க ஆட்சி வரும் நிலையில், அவரும் பழையபடி, மூன்றெழுத்து கிச்சன் கேபினட் அம்மாவை நல்லா தெரியும். மருமகனை தெரியும் என்று சொல்லியே, பெரும் வசூல் வேட்டையை நடத்தி முடித்துவிட்டார் என்கிறார்கள். எப்படியோ, மேலிடத்து விவகாரமாக இருப்பதாலும், பணம் பங்குபோட்டு கொடுப்பதாலு ராஜப்பா கிராவல் மண்ணை கொள்ளையடிப்பதில் ராஜநடை போட்டு வருகிறார்.

இந்த ராஜப்பாவை சுங்கவரித்துறை, வருமானவரித்துறை, அமலாக்கத்துறை என மூன்று துறையினரும் சுத்துப்போட தயாராகி விட்டதாக அத்துறை அதிகாரிகள் சிலர் நம்மிடம் அடித்துக் கூறுகின்றனர். அவர்களின் டார்கெட்டில் அமைச்சர் பெயரும் இருப்பதாக தகவல் உலா வருகின்றது. ■

அரசியல் நெப்போலியன்




## வால்பாறை தொகுதி

# அஸ்தமனத்தை நோக்கி உதய சூரியன்..?

# கூட்டணி கட்சிக்கு தள்ளிவிட தி.மு.க ஆலோசனை..?

**கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்றத் தொகுதி வரலாற்றில், காலங்காலமாக மலைப்பகுதி தி.மு.கவுக்கு ஆதரவாகவும், கீழே உள்ள பகுதிகள் அ.தி.மு.கவிற்கு ஆதரவாகவும் தான் இருந்து வந்துள்ளது. அதனை கடந்த 2021 தேர்தலில் அ.தி.மு.க முறியடித்து மலைப்பகுதியிலும் தனது செல்வாக்கை நிரூபித்தது.**

அதற்கு காரணம், தி.மு.கவில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் உட்கட்சி பூசல்கள் என பல்வேறு விஷயங்கள் சொல்லப்படுகிறது. அந்த வகையில் இரண்டு கட்சிகளிலும் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளுக்கு அந்த இரண்டு கட்சிகளிலும் ஏற்பட்ட மாற்றங்களே முக்கிய காரணம் என்பது அனைவரும் அறிந்ததே.

வால்பாறை தி.மு.க முன்னாள் நகரச் செயலாளர் கோழிக்கடை கணேசன். கட்சியில் இவரைத் தெரியாதவர்கள், வால்பாறையில் மட்டுமல்ல எங்குமே இருக்க முடியாது என்கிற அளவுக்கு வால்பாறை தி.மு.கவில் கோலோச்சி வந்தவர். தனது நகரச் செயலாளர் பதவி பறிக்கப்பட்ட போதும் தொய்வின்றி கட்சிப் பணியாற்றி வரும் இவர் மீது, தற்போது கட்சியினர் பல்வேறு விமர்சனங்களை வைத்தாலும், அவரின்


மு.க.ஸ்டாலின்


கணேசன்


சுதாகர்


அமுல் கந்தசாமி

கட்சிப் பணிகள் குறித்து அவர்களால் குறை சொல்ல முடியவில்லை.

மேலும், கோழிக்கடை கணேசன் பொறுப்பில் இருக்கும் வரை தி.மு.க வாக்கு வங்கி சிறிதளவு கூட சரியாமல் இருந்தது. தவிர வால்பாறையில் பல்வேறு பிரச்சினைகளில் மக்களோடு நின்றவர் கோழிக்கடை கணேசன். சொந்த கட்சியோ கூட்டணி கட்சியோ யார் வேட்பாளராக இருந்தாலும் அவர்களது வெற்றிக்கு கடுமையாக உழைத்து, வால்பாறை என்றாலே மலைப்பகுதியில் தி.மு.கவுக்கு சாதகம் தான் என்கிற நிலையை தொடர்ந்து கட்டிக் காத்து வந்தவர் என்று கணேசனின் கட்சிப் பணிகள் குறித்து மாற்றுக் கட்சியினர் கூட பாராட்டுகின்றனர்.

வால்பாறை தொகுதி அ.தி.மு.க சிட்டிங் எம்.எல்.ஏ அமுல் கந்தசாமி சமீபத்தில் மரணமடைந்தார். அவரது மக்கள் பணிகள் எல்லோராலும், அதாவது மாற்று கட்சிக்காரர்கள் கூட பாராட்டும் வகையிலேயே இருந்தது. தற்போது அவர் இருந்திருந்தால் கட்சியில் மீண்டும் அவரே களமிறக்கப்பட்டு கடந்த முறையை விட அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று விடுவார் என்பதை தி.மு.கவினரே ஆமோதிக்கின்றனர். அது ஒருபுறம் என்றாலும் தற்போதும் அ.தி.மு.க சார்பில் களம் காண வரிசை கட்டி நிற்கின்றனர். மறைந்த எம்.எல்.ஏ அமுல் கந்தசாமியின் உறவினர் முன்னாள் எம்.எல்.ஏ கஸ்தூரி வாசு, பொள்ளாச்சி நகராட்சி கவுன்சிலர் வசந்த் ஆகியோர் அந்த வரிசையில் முக்கியமானவர்கள். அதில் வசந்தை கட்சித் தலைமை ஏற்கனவே டிக் செய்து விட்டதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், ஆளும்தரப்பான தி.மு.கவிலோ களத்தில் நிற்க ஆட்களை தேட வேண்டிய நிலைதான் காணப்படுகிறது. நகரச் செயலாளர் சுதாகருக்கு வாய்ப்பளிக்கும் பட்சத்தில் தி.மு.க டெபாசிட் தொகையை இழந்தாலும் ஆச்சர்யப்படுவதிற்கில்லை. குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாமல் மக்களிடம் நல்ல வரவேற்பு பெற்றிருக்கும் ஓரிருவர் இருந்தாலும், அவர்களோ வழக்கமாக தி.மு.க கேட்கும் எவ்வளவு செலவு பண்ணுவ என்ற கேள்விக்கு பதில் சொல்ல வழியில்லாத வசதியற்றவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில் த.வெ.க வேறு ஒருபுறம் மல்லுக்கட்ட தயாராகி வருகிறது. ஆக மொத்தம் தேர்தலில் வால்பாறை தொகுதியில் பரபரப்புக்கு பஞ்சமிருக்காது என்றே சொல்லலாம்.

வால்பாறை தி.மு.கவில் கணேசன் போன்றோர் பொறுப்பில் இல்லாதது, தற்போதைய நகரச் செயலாளர் சுதாகர் மீது கட்சியினர் மற்றும் மக்கள் மத்தியில் காணப்படும் அதிருப்தி, ஆளுங்கட்சியினரால் நகராட்சியில் வரலாறு காணாத அளவில் நடக்கும் ஊழல்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு பணிகள் தவிர வால்பாறைக்கு சொல்லும்படி பணிகள் எதுவும் செய்யாதது, தேயிலை தொழிற்சாலை பிரச்சினைகளில் கவனம் செலுத்தாதது, எஸ்டேட் பகுதிகளில் முறையாக சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்காதது, தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விஷயத்தில் சரியான நடவடிக்கை எடுக்காதது, உட்கட்சி பூசல்கள், கமிஷன், கலெக்ஷன், கரப்ஷன் விஷயத்தில் சொந்த கட்சிக்குள்ளேயே அடித்துக் கொள்வது, கட்சிக்குள் ஒருவர் மீது ஒருவர் பெட்டிசன் போடுவதையே முழு நேர வேலையாக இருப்பது போன்ற பல்வேறு விஷயங்களால், வால்பாறை மக்கள் தி.மு.க மீது ஏக கடுப்பில் இருப்பதாகவே தெரிகின்றது.

ஆகவே, வரும் 2026 சட்டமன்ற தேர்தலில், தி.மு.க பணத்தை தண்ணீராக அல்ல, அருவியாக கொட்டினாலும், வால்பாறையில் ஏற்கனவே அஸ்தமனமாகி கொடிருக்கும் உதய சூரியனை ஒளிரச் செய்வது மிகவும் சிரமம் என்கின்றனர் அரசியல் ஆர்வலர்கள். எனவே, வரும் தேர்தலில் தி.மு.க தனது கூட்டணி கட்சிகளில் ஒன்றுக்கு, மேற்படி தொகுதியை தள்ளிவிடுவது சாலச்சிறந்தது என்பதே நிதர்சனம். ■




கோவை
நெப்போலியன்

# அரசு நூலகங்களில் விதிமுறை மீறல்கள்..!

## திரும்பி பார்க்குமா திராவிட மாடல் அரசு..?

**தமிழகத்தில் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நூலகங்களுக்கென்று தனி கவனம் செலுத்த தவறியதில்லை. அதிலும் குறிப்பாக தி.மு.க ஆட்சி என்றால் சொல்லவே வேண்டாம். சென்னையில் ஆசியாவிலேயே மிகப்பெரிய அளவில் அண்ணா நூற்றாண்டு நூலகம் தொடங்கி தற்போது மதுரையில் பிரம்மாண்டமான நூலகம் வரை பல நூலகங்கள் அமைத்து பலதரப்பட்ட மக்களையும் வாசிப்பதில் ஆர்வம் கொள்ளச் செய்ததில் தி.மு.கவுக்கு முக்கிய பங்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.**

அப்படி பார்த்து பார்த்து நூலகங்களை அமைத்து, மக்களின் வாசிப்பு திறனை ஊக்குவிக்கும் தமிழக அரசு, அந்த நூலகங்களில் நடக்கும் முறைகேடுகளை இதுவரை கண்டு கொள்வதாகவே தெரியவில்லை. அந்த முறைகேடுகளை முழுவதும் வெளியிட வேண்டும் என்றால் கண்டிப்பாக இந்த ஒரு இதழ் போதாது என்பதால் முக்கியமானவற்றை மட்டும் சுருக்கமாக பார்ப்போம்.

தமிழகம் முழுவதும் நூலகங்களில் விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகள் வெளியே தெரியாமல் கமுக்கமாக நடந்து வருகிறது. ஆனால், கோவை மாவட்டத்தில் தான் அது மிகப்பெரிய அளவில் அப்பட்டமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

கோவை மாவட்டத்தில் நகர்ப்புற நூலகம், ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், பகுதிநேர நூலகம் என சுமார் 250 நூலகங்கள் உள்ளதாக தெரிகிறது. நமக்கு வந்த புகார்களின் அடிப்படையில் பார்க்கும்போது முதலாவது மேற்படி நூலகங்களில் பெரும்பாலும் நூலகர்கள் பணியில் இருப்பதில்லை. வெறுமனே நூலகங்களுக்கு வந்து, பணிப் பதிவேட்டில் கையெழுத்து மட்டுமே போட்டு விட்டு தங்களது சொந்த அலுவல்களையோ அல்லது வருமானம் வரக்கூடிய வேறொரு பணிக்கோ சென்று விடுகின்றனராம். அதற்கு அவர்களுக்கு மாற்றாக அலுவலகத்தில் மிக சொற்ப அளவில் சம்பளம் கொடுத்து யாராவது ஒருவரை நியமித்து கொள்கிறார்களாம் அல்லது துப்புரவு பணியாளர்களை அதற்கென பயன்படுத்தி கொள்கிறார்களாம். இதுதவிர, ஒரே நூலகர் பல நூலகங்களில் பொறுப்பு நூலகர்களாக பணிபுரியும் நிலையும் உள்ளது. அது எதன் அடிப்படையில் என்று தெரியவில்லை.



மு.க.ஸ்டாலின்



மகேஷ் பொய்யாமொழி







மேலும், ஒருவர் நூலகராக பணியில் சேரும் போது, எந்த கல்வித் தகுதியுடன் உள்ளாரோ, அதன் பின் பணியில் இருந்து கொண்டே மேற்படிப்பு படித்து தங்களது கல்வித் தகுதியை உயர்த்தி கொள்கிறார்கள். அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணி உயர்வு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் கிடைக்கிறது.

அதற்காக முறையாக படிக்காமல், குறுக்கு வழியில் தாய் தந்தையை சுற்றி வந்து பழத்தை பெற்றவர் பெயரில் இயங்கி வரும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஒரு அங்கீகரிக்கப்படாத பல்கலைக்கழகத்தில், உள்ள அந்த கல்லூரியில் குறுக்கு வழியில் பணத்தை கொடுத்து போலியாக சான்றிதழ் பெற்று, அதன் மூலம் அநேகம் பேர் இன்றைக்கு BLIS மற்றும் MLIS ஆக இருக்கின்றனர். அந்த சான்றிதழ்களை முறையாக ஆய்வு செய்தால் இவர்களின் மோசடிகள் வெளிச்சத்திற்கு வரும் என்று கூறுகின்றனர் தலைமை அலுவலக வாசிகள் சிலர்.

அதேபோன்று, நூலகப் பணியாளர்கள் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பணிமாறுதல் செய்யப்பட வேண்டும் என்ற விதிமுறைகளை மீறி, பல நூலகர்கள் பல வருடங்களாக ஒரே இடத்தில் பணி புரிந்து வருகின்றனராம். அதுமட்டுமல்லாமல், நூலகங்களில் மற்றும் மாவட்ட தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் பெண்களில் சிலர், சக நூலகர்கள் மற்றும் தங்களின் மேல் அதிகாரம் படைத்தவர்களால் பல விரும்பத்தகாத இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் வேதனை தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று காலங்கடந்த நூல்களை இருப்பு நீக்கம் செய்யப்படுவதிலும் மிகப்பெரிய அளவில் ஊழல் நடக்கிறதாம். இது போன்ற மேலும் பல விதிமுறை மீறல்கள், முறைகேடுகள், ஊழல் விஷயங்கள், அரசை ஏமாற்றி நடக்கும் அட்டூழியங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அந்தளவுக்கு நூலகங்களின் பட்டியல் ரொம்ப நீளமானது. அவற்றை நாம் வரும் இதழ்களில் தொடர்ந்து பார்க்கலாம்.

சரி, மேற்படி நூலகங்கள் குறித்த மோசடிப் புகார்களுக்கு விளக்கம் கேட்கலாம் என்று, மாவட்ட நூலக அதிகாரியை நாம் தொடர்பு கொள்ள முயற்சித்த போது, அவரே அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பரீட்சையில் காப்பியடித்து மாட்டிக்கொண்டு, இடைநிற்றலுக்கு ஆட்பட்டவராம். அவரது சான்றிதழே சந்தேகத்திற்கு உரியது என்று பெரிய குண்டை தூக்கிப் போடுகிறார்கள் அப்பாவி அலுவலக வாசிகள். என்ன கொடுமை சார் இது என்று நொந்து போய், திரும்பிய நமக்கு எங்கே செல்லும் இந்த பாதை, யாரோ... யாரோ... யார் அறிவாரோ... என்கிற பாடல் வரிகள் தான் நினைவுக்கு வந்தது.

இதென்ன பிரமாதம் இதைவிட மாவட்ட நூலக துறையையே அதிர வைக்கும் சம்பவம் ஒன்று அரங்கேறியுள்ளது மேற்படி கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட ஆனைமலை வட்டாரத்தில் உள்ள ஒரு நூலகத்தில். கடந்த 2014 முதல் 2017 வரை நூலகராக பணியில் இருந்த ஒரு பெண்மணி, அதே ஆண்டுகளில் பொள்ளாச்சியில் உள்ள பிரபல தனியார் கல்லூரியின் நூலகத்திலும் பணிபுரிந்து இரண்டு பக்கமும் சம்பளம் பெற்று அரசாங்கத்தை ஏமாற்றி வந்துள்ளார் என்பதுதான் மேற்சொன்ன அதிர வைக்கும் சம்பவம். அது குறித்தும் ஆதாரங்களுடன் விரிவாகவும் விளக்கமாகவும் பிறகு பார்க்கலாம்..!

நூலகங்கள் பக்கம் தன் பார்வையை திருப்புவாரா? அமைச்சர் அன்பில் மகேஷ். பொறுத்திருந்து பார்ப்போம். ■

பொள்ளாச்சி | நெப்போலியன்

# நீதிமன்ற உத்தரவை குப்பையில் போட்ட கோயில் நிர்வாகம்..!

## போராட தயாராகும் அரசியல் அமைப்புக்கள்..?

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் பிரசித்தி பெற்றது சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில். இக்கோயிலுக்கு சொந்தமான இடங்கள் பொள்ளாச்சியை சுற்றி பல இடங்களில் உள்ளன. அதில் ஒன்று பொள்ளாச்சி மையப் பகுதியான தேர்முட்டி பகுதியில் அமைந்துள்ளது. அதனை, அதில் நிரந்தரமாக பெரிய அளவில் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்பது உட்பட பல்வேறு நிபந்தனைகளுடன் சொற்பத் தொகைக்கு குத்தகைக்கு எடுத்த பந்தல் கணேஷ், மளிகை பாஸ்கர், நகை கடை முருகன் ஆகிய மும்மூர்த்திகள், அந்த நிபந்தனைகள் ஒன்றைக் கூட கடைப்பிடிக்காமல், தங்களது இஷ்டத்திற்கு பெரிய அளவிலான வணிக வளாகங்கள் கட்டி, அதனை பல லட்சங்கள் அட்வான்ஸ் மற்றும் பல்லாயிரம் வாடகை என்று பணம் பார்த்து விட்டனர்.



பொள்ளாச்சி | நெப்போலியன்

கோவில் நிலம் ஆக்ரமிப்பு...
இடித்து தள்ள நீதிமன்றம் உத்தரவு...

முட்டு சந்தில் மும்மூர்த்திகள்

கோவை இந்து சமய அறநிலையத்துறை உதவி கமிஷனராக இருந்த ஒரு பெண் அதிகாரி சமீபத்தில் லஞ்சம் வாங்கி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அந்த சம்பவம் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மிகவும் பரபரப்பாக பேசப்பட்டது.

அந்த பரபரப்பு அடங்குவதற்குள் அதே அறநிலையத் துறையில் மற்றுமொரு மோசடி அம்பலமாகி, இந்து சமய அறநிலையத்துறை என்ற ஒன்று ஒழிக்கப்பட வேண்டும் என்கிற பா.ஜ.க வினரின் கூக்குரலை மக்கள் ஆதரிக்கும் நிலை வந்து விடுமோ என்று நடுநிலையாளர்களை அச்சப்பட வைத்துள்ளது மேற்படி சம்பவங்கள்.


கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறையில் மேற்படி பெண் அதிகாரி போன்ற லஞ்ச அதிகாரிகளால் மாவட்டமெங்கும் அதிகளவில் கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்பு என்ற பெயரில் கொள்ளைபோய் கொண்டிருக்கிறது. அந்த வகையில் கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலும் கோவில் நிலம் தொடர்பான பெரிய மோசடி ஒன்று நடைபெற்று, அது நகர அ.தி.மு.கவினரின் சட்டப் போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பொள்ளாச்சியில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் தேர்முட்டி பகுதியில் உள்ளது. அந்த இடத்தை

பொள்ளாச்சி வட்டம் அம்மேகவுண்டனூரைச் சேர்ந்த மளிகை பாஸ்கர், பந்தல் கணேஷ் மற்றும் நகை(வெள்ளி)கடை முருகன் ஆகிய மூன்று பேரும், பாஸ்கரின் உறவினராக சொல்லப்படும் மேற்படி இந்து சமய அறநிலையத்துறையில் உதவி

ஆக்கிரமிப்பு இடம்

சுப்ரமணியசாமி கோவில்

www.tamil.paraparappucheithi.com | பரபரப்பு செய்தி | 10 | செப்டம்பர் 01-15, 2025



3 of 6 | WP No. 26908 of 2025

WEB COPY

**ORDER**


This writ petition has been filed for issue of writ of mandamus directing the 1st and 2nd respondents to act upon the representation made by the petitioner wherein, the petitioner is seeking for removal of encroachment that is said to have been made by the 5th and 6th respondents in the property belonging to Arulmigu Subramania Swami Thirukovil.

2.Heard Mr.V.R.Vishnu, learned counsel appearing on behalf of the petitioner, Mr.E.Vijayanand, learned Additional Government Pleader appearing on behalf of the 1st respondent, Mr.N.R.R.Arun Natarajan, learned Special Government Pleader appearing on behalf of respondents 2 and 3 and Mr.L.Jai Venkatesh, learned Standing Counsel appearing on behalf of the 4th respondent.


4.Taking into consideration the facts and circumstances of the case and the materials placed before this Court, there shall be a direction to the 3rd respondent to act upon the representation made by the petitioner and ascertain

https://www.mhc.tn.gov.in/judis


மு.க.ஸ்டாலின்


சேகர்பாபு


கிருஷ்ணகுமார்


ஜேம்ஸ்ராஜா

மேற்படி கோவில் இடத்தில் கட்டிடங்கள் கட்ட கோவில் நிர்வாகத்திடமோ, பொள்ளாச்சி நகராட்சியிலோ எவ்வித அனுமதியும் பெறவில்லை. இதனை கடுமையாக எதிர்த்த நகர அ.தி.மு.க செயலாளர் கிருஷ்ணகுமார் மற்றும் அ.தி.மு.க கவுன்சிலர் ஜேம்ஸ் ராஜா ஆகியோர், பல்வேறு வகையான சட்டப் போராட்டம் நடத்தி, சம்மந்தப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை எட்டு வாரங்களில் முழுமையாக இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்று வந்தனர்.

ஆனால், எட்டு வாரங்கள் கடந்து பதினாறு வாரங்கள் ஆகிவிட்ட போதிலும் கோயில் நிர்வாகமோ, சம்பந்தப்பட்ட நபர்களோ கோர்ட் உத்தரவை துளியும் மதிக்காமல், அந்த தீர்ப்பினை நீர்த்துப் போகச் செய்யும் தில்லாலங்கடி வேலைகளை செய்து வந்துள்ளனர். இதனைக் கண்டு டென்ஷனான கிருஷ்ணகுமார் மற்றும் ஜேம்ஸ் ராஜா தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

கோவை மாவட்டத்தை பொருத்தவரை அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்று ஆளுங்கட்சி போல் காட்சியளிக்கும் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க மற்றும் மக்களின் கடைசி நம்பிக்கையான நீதிமன்றம், நாட்டின் நான்காவது தூணான பத்திரிகை துறை ஆகியவற்றுக்கே சிறிதளவும் அசையாத மேற்படி மும்மூர்த்திகளும், அவர்களின் லஞ்சப் பணத்தில் மஞ்சள் குளிக்கும் கோயில் நிர்வாகமும், சாதாரண மக்கள் மற்றும் பக்தர்கள் விஷயத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்று சொல்லி தெரிய வேண்டியதில்லை. கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறையோ இந்த சம்பவத்தை கடுகளவும் கண்டு கொள்வதாக தெரியவில்லை. இந்து சமய அறநிலையத்துறையை கண்டாலே வேப்பங்காயாக கசக்கும் பா.ஜ.க வின் பொள்ளாச்சி நகர நிர்வாகிகளும் ஏன் இதனை கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பது பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது.


சுப்பிரமணியசுவாமி கோயில்

கோயில் நிலங்களை நாங்கள் தான் அதிகளவில் மீட்டுள்ளோம் என மார்தட்டிக் கொள்ளும் தமிழக அரசும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபுவும், இந்த விஷயத்தில் இனியும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் பட்சத்தில், தி.மு.கவுக்கு ஏற்கனவே எட்டாக்கனியாக இருக்கும் பொள்ளாச்சி தொகுதி வெற்றி, மேலும் மோசமான நிலைக்கு செல்லும் என்பதை யாராலும் மறுக்க இயலாது.

மேற்படி கோவில் நிர்வாக இ.ஓ மற்றும் ஊழியர்களின் முறைகேடுகளை தொடர்ந்து அம்பலப்படுத்தி வரும் நமது பரபரப்பு செய்தியும் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கும் வரை ஓயாது...! ■

திருவள்ளூர் | தமிழ்செல்வன்

## அரசு வேலை...

# ரூ.3 கோடி இன்சூரன்ஸ் பணம்...

## பாம்பை கடிக்கவிட்டு அப்பாவை கொன்ற மகன்கள்...

**திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை நல்ல தண்ணீர்குளத்தை சேர்ந்தவர் கணேசன். அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி வந்தார். அவருக்கு மோகன்ராஜ், ஹரிஹரன் என்ற 2 மகன்கள். இருவருக்கும் திருமணம் முடிந்து ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகின்றனர். மூத்த மகன் மோகன்ராஜ் நெசவுத் தொழிலும், இளைய மகன் ஹரிஹரன் கார் டிரைவராகவும் வேலை செய்து வந்துள்ளனர்.**




கடந்த அக்டோபர் மாதம் 22 ஆம் தேதி நள்ளிரவு வீட்டில் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த கணேசனை கட்டுவிரியன் பாம்பு கடித்ததாக கூறி அவரது மகன்கள் பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் பாம்பு கடித்து ஏற்கனவே அவர் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொதட்டூர்பேட்டை போலீஸார், வழக்கு பதிவு செய்து விசாரித்தனர். இந்தநிலையில் பாம்பு கடித்து இறந்த கணேசனுக்கு அவரின் குடும்பத்தினர் இறுதி மரியாதை செலுத்தினர். அதைத் தொடர்ந்து கணேசன், தன்னுடைய பெயரில் எடுத்து வைத்திருந்த 3 கோடி ரூபாய் இன்ஸ்சூரன்ஸ் தொகையை பெற அவரின் மகன்கள் மோகன்ராஜ், ஹரிஹரன் ஆகியோர், இன்ஸ்சூரன்ஸ் நிறுவனத்தில் விண்ணப்பித்தனர். பாம்பு கடித்து இறந்த கணேசன் குடும்பத்தில் உள்ளவர்கள் மீது 11 காப்பீடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் கணேசன் மீது மட்டும் கடந்த 6 மாதங்களில் ரூபாய் 3 கோடி அளவுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதில் சந்தேகம் அடைந்த இன்ஸ்சூரன்ஸ் நிறுவனம், வடக்கு மண்டல ஐ.ஜி அஸ்ரா கர்க்கிடம் புகாரளித்தது. அதன் பேரில் திருவள்ளூர் மாவட்ட எஸ்.பி விவேகானந்த சுக்லாவை விசாரிக்க ஐ.ஜி அஸ்ரா கர்க் உத்தரவிட்டார். அதன்பேரில் டி.எஸ்.பி ஜெயஸ்ரீ, இன்ஸ்பெக்டர்கள் தங்கதுரை, கஸ்தூரி மற்றும் சப்இன்ஸ்பெக்டர்கள் முரளி, மாரிமுத்து ஆகியோர் கொண்ட தனிப்படை



ஹரிஹரன்



மோகன்ராஜ்

அமைக்கப்பட்டது.

தனிப்படை போலீஸார், கணேசனின் மகன்களான மோகன்ராஜ், அவரின் தம்பி ஹரிஹரன் ஆகியோரிடம் கணேசன் மரணம் குறித்து விசாரித்தபோது, பாம்பு கடித்து அப்பா இறந்துவிட்டதாகக் கூறினர். தொடர்ந்து கணேசனை எப்போது பாம்பு கடித்தது என இருவரிடமும் போலீஸார் விசாரித்தபோது எந்த நேரத்தில் கடித்தது என எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பார்க்கும் போது அவர் வாயில் நுரைதள்ளி மயங்கிய நிலையிலிருந்தார் என்று மோகன்ராஜ், ஹரிஹரன் ஆகியோர் தெரிவித்தனர். பாம்பு எப்படி வீட்டுக்குள் நுழைந்தது என்று கேட்டதற்கு தெரியாது என பதிலளித்திருக்கிறார்கள். இதையடுத்து கணேசனைக் கடித்த பாம்பை கொன்று விட்டீர்களா? என போலீஸார் கேட்டனர். ஆமாம், அப்பாவை கடித்த பாம்பு, அதே அறையில் பதுங்கியிருந்தது. அது வேறு யாரையும் கடித்து விடக்கூடாது என்பதற்காக நாங்கள் இருவரும் அடித்தே கொன்று விட்டோம் என கூறினர். மோகன்ராஜ், ஹரிஹரன் ஆகியோர் கூறிய பதிலை உண்மையென நம்புவதைப் போல போலீஸாரும் இருவரையும் விசாரித்து விட்டு அனுப்பி வைத்தனர்.

ஆனால் இருவரையும் ரகசியமாக தனிப்படை போலீஸார் கண்காணித்தனர். கணேசன் உயிரிழந்த தினத்தில் மோகன்ராஜ், ஹரிகரனின் நடவடிக்கை குறித்தும் அக்கம் பக்கத்தில் விசாரித்து சில தகவல்களை தனிப்படை போலீஸார் சேகரித்தனர்.

போலீஸாரின்விசாரணையில், மோகன்ராஜ், ஹரிஹரன் ஆகியோர், கடந்த அக்டோபர் மாதத்தில் பாலாஜி, பிரசாந்த், நவீன்குமார், தினகரன் ஆகியோரிடம் அடிக்கடி பேசி வந்ததும், அவர்களுக்கு லட்சக்கணக்கில் பணம் கொடுத்ததும் தெரியவந்தது. இதில் தினகரன், என்பவர் பாம்பு பிடிக்கும் தொழில் செய்து வந்த தகவலை தெரிந்த தனிப்படை போலீஸார், அவரிடம் விசாரித்தனர்.

போலீஸாரின் கிடுக்குப்பிடி விசாரணையில் கணேசனைக் கொலை செய்ய தினகரன் கட்டுவிரியன் பாம்பை பிடித்து கொடுத்ததும், அதற்காக அவருக்கு பணம் கொடுத்ததும் தெரியவந்தது. இதையடுத்து தினகரன் அளித்த தகவலின்படி கூலிப்படையாக செயல்பட்ட பாலாஜி, பிரசாந்த், நவீன்குமார் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து இன்ஸ்சூரன்ஸ் பணம், அரசு வேலை ஆசையில் பெற்ற அப்பாவை பாம்பை கடிக்க வைத்து கொலை செய்த குற்றத்துக்காக மோகன்ராஜ், ஹரிஹரன் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர்.

இதுகுறித்து, தனிப்படை போலீஸாரிடம் பேசினோம் அப்போது அவர்கள், கைது செய்யப்பட்ட மோகன்ராஜ் அவரின் தம்பி ஹரிஹரன் ஆகிய இருவருக்கும் நிரந்தர வேலை இல்லாததால் போதிய வருமானம் இல்லை. அதனால் இருவரும் கடன் தொல்லையால் சிக்கித் தவித்து வந்திருக்கிறார்கள். ஆடம்பரமாக வாழவும், அப்பாவை கொலை செய்து கருணை அடிப்படையில் அரசு வேலையை பெறவும் ஆசைப்பட்டு மோகன்ராஜ், ஹரிஹரன் இருவரும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

அதற்காக மோகன், தான் ஏற்கெனவே சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றிய போது தன்னுடன் பணியாற்றிய பாலாஜி என்பவரிடம், அப்பா கணேசனை கொலை செய்வது குறித்து ஆலோசித்திருக்கிறார். அப்போது பாம்பை கடிக்க வைத்து கொலை செய்தால் யாருக்கும் எந்த சந்தேகமும் வராது என பாலாஜி தெரிவித்ததோடு, தன்னுடைய உறவினர் நவீன் குமார் என்பவருக்குத் தெரிந்த பாம்பு பிடிக்கும் தொழிலில் தொடர்புடைய பிரசாந்த், தினகரன் ஆகியோரை மோகன்ராஜிக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறார்.

அதனை தொடர்ந்து மணவூர் காட்டுப்பகுதியிலிருந்து கட்டுவிரியன் பாம்பை பிடித்த தினகரன், சாக்குபையில் அடைத்து கொடுத்திருக்கிறார். அதை பொதட்டூர்பேட்டையில் உள்ள கணேசன் வீட்டுக்கு காரில் கொண்டு வந்து, அவர் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் கழுத்தில் போட்டிருக்கிறது இந்தக் கும்பல். அந்தப் பாம்பு கணேசனின் கழுத்தில் 3 முறை கடித்து விட்டு தப்பி செல்ல முயன்றிருக்கிறது. அதனால் பாம்பை அடித்துக் கொன்றிருக்கிறார்கள். அப்பா கணேசனை பாம்பு கடிக்கும் போது அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் மோகன்ராஜ் மற்றும் ஹரிஹரன். கணேசன் உடலில் பாம்பின் விஷம் ஏறி, அவர் உயிரிழக்கும் வரை மகன்களும், கூலிப்படையைச் சேர்ந்தவர்களும் காத்திருக்கிறார்கள் என்றனர்.

போலீஸ் உயரதிகாரி ஒருவர் கூறும்போது, கணேசனைக் கொலை செய்யும் சதி திட்டத்தில் முதல்கட்டமாக அண்ணன், தம்பி இருவரும் கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் நாகபாம்பை வைத்து கடிக்க வைத்திருக்கிறார்கள். ஆனால் பாம்பு கடித்தும் நல்ல வேளையாக கணேசன் உயிர்பிழைத்து விட்டார். அதனால் இரண்டாவது தடவை கொடிய விஷம் கொண்ட பாம்பான கட்டுவிரியனை கொண்டு வந்து கடிக்க வைத்து கணேசனை தீர்த்துக் கட்டியிருக்கிறார்கள் என்றார். ■

மகேஸ்வரன்

# ஜெயிக்கனும்னா இந்த முறை தி.மு.க தான் போட்டியிடனும்...

## கறார் காட்டும் ஊத்தங்கரை உடன் பிறப்புக்கள்...

**கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதியில், இந்தமுறை ஜெயிக்கனும்னா தி.மு.கதான் போட்டியிடனும். அதிலும் தொகுதியில் உள்ளவர்தான் போட்டியிடனும். வேட்பாளரை வெளியிலிருந்து இறக்குமதி பண்ணக்கூடாது என்று உற்சாகமாகவும், கண்டிப்போடும் மனம் திறக்கிறார்கள் உடன்பிறப்புகள்.**

மேலும், நாங்க ஆளுங்கட்சி. நாங்கதான் ஜெயிக்கனும் என்பதில் வெறியாக இருக்கிறோம். வழக்கம்போல காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள, கம்யூனிஸ்ட் என, கூட்டணி கட்சிக்கு தள்ளி விட்டுட்டா நாங்க சோர்வடைந்து விடுவோம். தி.மு.க நிர்வாகிகளின் மனநிலை இதுதான் என்று சொல்லும் உடன்பிறப்புக்கள், இன்னும் ஒரு ரகசியம் இருக்கு என்கின்றனர்.

அதாவது, தி.மு.க வேட்பாளர் போட்டியிட்டால், தேவையான அளவு வன்னியர், கவுண்டர்கள், ஒட்டுகளை வளைச்சிக்கலாம். நிறைய நலத்திட்டங்கள் மக்களை போய்ச் சேர்ந்திருக்கிறது. நிர்வாகிகள் மத்தியில் முழுமையான ஒத்துழைப்பு இருந்தால் போதும். தி.மு.க தொண்டர்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்கின்றனர்.


மதியழகன்


கிருஷ்ணமூர்த்தி

மேலும், 2016ல் அரசு மருத்துவராக இருந்த டாக்டர் மாலதி நாராயணசாமி ஆயிரத்து முன்னூறு ஓட்டு வித்தியாசத்தில் தான் தோற்றுப்போனார். அதற்கு காரணம் சில தி.மு.க நிர்வாகிகள் தான் என்கிறார்கள்.

கோடிகளை கொட்டி வெற்றியை தட்டி பறிக்க முடியாவிட்டாலும், அசராமல் தொகுதியையும் அறிவாலயத்தையும் சுற்றி சுற்றி வருகிறார் டாக்டர் மாலதி நாராயணசாமி.மாநில மகளிர் ஆணைய உறுப்பினர், மாநில மகளிரணி பிரச்சார குழு செயலாளர் என்று பிரபலமாகவும் இருக்கிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மாப்பிள்ளை சபரீசன், முதல்வரின் துணைவியார் துர்க்கா ஸ்டாலின், கனிமொழி ஆகியோரை அடிக்கடி தரிசனம் செய்து வருகிறார். அதனால்தானோ என்னவோ, ஊத்தங்கரை தொகுதியில் தி.மு.க அல்லாதவர்கள் மத்தியிலும் பேசப்படுவதாக, உடன் பிறப்புகள் கூறுகின்றனர்.

அடுத்தவர் பொறியாளர் அணியை சேர்ந்த மிட்டப்பள்ளி காந்தி. இவரும் லேசுபட்ட ஆள் இல்லை சீட் கிடைச்சா கோடிகளை செலவு






டாக்டர் மாலதி

பண்ணக்கூடிய நபர். கட்சி நிகழ்ச்சிகளுக்கு கூப்பிட்டா பேஷண்ட் காத்துகிட்டு இருக்காங்க. நான் கிளினிக் போறேன்னு சொல்லிட்டு கிளம்பிடுவாராம் டாக்டர் கந்தசாமி. அவரும் எம்.எல்.ஏ சீட் எப்படியாவது வாங்கிடனும் என்கிற ஆசையில் இருக்கிறார். அடுத்து, கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் லயோலா ராஜசேகர். இவர் தலைமை கழக பேச்சாளராகவும் இருக்கிறார். இந்தமுறை எனக்குத்தான் சீட்டு என்று சொல்லிக்கொண்டு வலம் வருகிறார்.

**தி.மு.கவினர் ஆர்வமுடன் சீட்டுக்காக வரிசையில் நின்றாலும், மாவட்ட செயலாளர் மதியழகன் ஆதரவு யாருக்கு என்கிற பட்டிமன்றம் இன்னொரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது**

இவர்களைத் தவிர, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அமைப்பாளர் ஜீவானந்தம், ஊத்தங்கரை ஒன்றிய துணைச் செயலாளர் ஜெயச்சந்திர பாண்டியன் ஆகியோர், தனி ரூட்ல எம்.எல்.ஏ சீட் வாங்க பைபாஸ்ல பயணம் பண்றதா மீடியாக்காரர் ஒருவர் நம் காதில் கிசுகிசுத்தார். இது போக, மிட்டப்பள்ளி காந்தி, சின்னதாய், ஓய்வுபெற்ற அரசியல்வாதிகளான சிங்காரப்பேட்டை ராஜா, வாத்தியார் சந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ கிருஷ்ணமூர்த்தி என சீட் கேட்கும் தி.மு.கவினர் பட்டியல் மிக நீள்கிறது.

இப்படி தி.மு.கவினர் ஆர்வமுடன் சீட்டுக்காக வரிசையில் நின்றாலும், மாவட்ட செயலாளர் மதியழகன் ஆதரவு யாருக்கு என்கிற பட்டிமன்றம் இன்னொரு பக்கம் நடந்துகொண்டிருக்கிறது என்கின்றனர்.

அ.தி.மு.க தொடர்ந்து தன் கட்சி சார்புல வேட்பாளரை நிறுத்தறாங்க, எங்க கட்சியில மட்டும் ஏன் கூட்டணிக்கு தள்ளி விட்டுடறாங்க. முப்பதாயிரம், நாற்பதாயிரம் ஓட்டு வித்தியாசத்தில தோற்கவா? நாடாளுமன்ற தேர்தல்னா ஓட்டு தாராளமா போடறாங்க. எம்.எல்.ஏ தேர்தல்னா நிறைய ஓட்டு குறையுது. ஏன்னு தெரியல என்கிறார்கள். ■

திருநெல்வேலி

இரா.தமிழ்

# நெல்லைக்கு அல்வா...

# தொகுதி மாறும் நயினார்..!

**சிட்டிங் தொகுதி சாதகமாக இல்லாத சூழலில், தொகுறி மாற பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் திட்டமிட்டுள்ள ராம்.**

அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணியில் பா.ஜ.க வெற்றி பெறக்கூடிய தொகுதிகள் எவை என்பது குறித்து பா.ஜ.க தலைமை தரப்பில் தமிழ்நாடு முழுவதும் ஆய்வு செய்துள்ளனர். அதில், பா.ஜ.கவி தற்போதைய சிட்டிங் எம்.எல்.எக்களின் தொகுதிகள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

அந்த ஆய்வில் பா.ஜ.க மாநிலத்தலைவர் நயினார் நாகேந் நிரனுக்கு, இந்த முறை நெல்லை தொகுதியில் அவ்வளவு சாதகமான சூழல் இல்லை. அதனால், தொகுதியை மாற்றுவது நல்லது என ஆய்வு முடிவு கள் கூறியுள்ளன.

ஆய்வில், தென்மாவட்டத்தில் பா.ஜ.க.விற்கு சாதகமான தொகுதி தொகுதிகள் என மதுரை தெற்கு, சாத்தூர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, கள ஆய்வை பா.ஜ.க கட்சி தரப்பு ஒருபுறமும், நயினார் நாகேந்திரன் தரப்பு மற்றொருபுறமும் மேற்கொண்டது. அதில் ராமநாதபுரம் தொகுதியில் ஏற்கனவே பல முறை பா.ஜ.க தரப்பில் போட்டியிட்டு பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. கணிசமான வாக்குகளும் கிடைத்துள்ளன. பலமான கூட்டணி அமைந்தால் வெற்றி கிடைக்கும் என்கின்ற கணக்கில் முன்னுரிமை அடிப்படையில் கள ஆய்வு செய்துள்ளனர். ஆனால், ராமநாதபுரத்தில் எதிர்பார்த்த ரிசல்ட் கிடைக்கவில்லையாம். பா.ஜ.கவினரின் விருப்பத்திற்கு மாறாகவே முடிவுகள் கிடைத்ததாம்.

ராமநாதபுரம் தொகுதியில் சிறுபான்மையினர் வாக்குகளே வேட்பாளர்களை தேர்வு செய்யும் அளவிற்கு உள்ளதாம். ஏற்கனவே அந்த தொகுதி தி.மு.க தரப்பிற்கு சாதகமாக உள்ளதாகவும்,அ.தி.மு.கவினர் இரண்டு கோஷ்டிகளாக பிரிந்து இருப்பதால், ராமநாதபுரம் தொகுதி நமக்கு சாதகமாக இருக்காது என்று ஆய்வு முடிவுகள் மூலம் தெரியவந்ததாம்.

அதை தொடர்ந்து மதுரை மேற்கு தொகுயில் பா.ஜ.கவுக்கு ஆதரவு அதிகமாக இருப்பதாகவும், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அந்த தொகுதியில்பா.ஜ.கவிற்கு அதிக வாக்குகள் கிடைத்ததாலும், அந்த தொகுதி பா.ஜ.கவுக்கு சரிபட்டு வருமா என்று ஆய்வு செய்தபோது, மதுரை தொகுதியில் போட்டியிட அ.தி.மு.கவினர் சிலர் தீவிர ஆர்வம் காட்டி வருவதால், பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நெல்லை தொகுதியில் இருந்து மதுரைக்கு வருவது அவ்வளவு



சரியாக இருக்காது என்றும், அதனால், மேற்கு தொகுயில் போட்டியிடலாம் என்றால், மதுரை மேற்கு தொகுதியும் சரிபட்டு வராது என்று தெரியவந்ததாம்.

எனவே நயினார் நாகேந்திரன் கடைசியாக தேர்ந்தெடுத்து இருப்பது, விருதுநகர் மாவட்டம் சாத்தூர் தொகுதியாம்.

அந்த தொகுதியில்தான் நயினார் நாகேந்திரன் சார்ந்த சமூகத்தின் வாக்குகளுடன், அ.தி.மு.க மற்றும் அ.மு.மு.க வினரின் வாக்குகளும் சேர்ந்தால் பா.ஜ.க விற்கு வெற்றி கிடைக்கும் என்று தகவல் வந்துள்ளதாம். அதனை தொடர்ந்து நயினார் நாகேந்திரன் தனக்கு வேண்டப்பட்ட ஜோதிடர்கள் மற்றும்பா.ஜ.கவில் உள்ள ஆன்மிக பிரிவை சேர்ந்தவர்களிடமும் கேட்டுள்ளார். அவர்களும் எல்லாவற்றையும் கூட்டி, கழித்து பார்த்து ஓகே சொல்லி உள்ளனராம்.

எனவே, அல்வா தொகுதியில் அல்வா கொடுத்துவிட்டு சாத்தூர் தொகுதியில் போட்டியிட முடிவு செய்துள்ளாராம் நயினார் நாகேந்திரன்.

ஏற்காடு

இரா.யுவபாரதி

# 600 அடி பள்ளத்தில் பெண் சடலம்... பார்சலில் வந்த மனைவியின் தாலி...

## கொலையில் முடிந்த கள்ளகாதல்

**சேலம் மாவட்டம் ஏற்காடு அருகே முறையற்ற உறவில் இருந்த பெண்ணை கொலை செய்து அந்தப் பெண்ணின் தாலியை கணவனுக்கு பார்சல் அனுப்பிய சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் இருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது மாரமங்கலம் கிராமம். அந்த கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவரும், நாமக்கல் மாவட்டம் சூளங்காட்டு புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சுமதி என்பவரும் காதலித்து வந்தனர். இந்நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சண்முகமும், சுமதியும் திருமணம் செய்து கொண்டனர்.

கணவன் மனைவி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். இரண்டு வருடங்களாகியும் இவர்களுக்கு குழந்தைகள் இல்லை. சண்முகம் டிரைவர் தொழில் செய்து வருவதால் மாரமங்கலம் கிராமத்திலேயே இருவரும் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், திடீரென கடந்த 23ஆம் தேதி மதியம் முதல் சுமதியை காணவில்லை. அன்று மாலையில் இருந்து சுமதியை தேடிய கணவர் மற்றும் உறவினர்கள் இரண்டு நாள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தேடியும் சுமதி கிடைக்காததால், கடந்த 25 ஆம் தேதி ஏற்காடு காவல் நிலையத்தில் சண்முகம் புகார் அளித்துள்ளார். இளம் பெண்ணை காணவில்லை என வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வந்தனர்.



சுமதி வெங்கடேஷ்



இது ஒருபுறம் இருக்க, கடந்த 26ஆம் தேதியன்று மாரமங்கலம் மலைக்கிராமத்திற்கு வந்த ஒரு பஸ் டிரைவர், ஒரு பார்சலை அங்கிருந்த மளிகைக்கடையில் தந்து, சண்முகம் என்பவரிடம் கொடுத்துவிடும்படி

சொல்லி உள்ளார். அந்த மளிகைக்கடைக்காரர் சண்முகத்திடம் பார்சலை தந்துள்ளார். அதனை திறந்து பார்த்தபோது அதில் மனைவி சுமதியின் தாலி இருந்துள்ளது.

அதிர்ச்சியடைந்த சண்முகம், டிரைவர் எதற்காக மளிகைக்கடைக்காரிடம் பார்சலை தர வேண்டும்? என்று விசாரித்தபோதுதான், கள்ளக்காதலன் வெங்கடேஷ் பெயர் அடிபட்டது. இதனால் வெங்கடேஷிடமே சென்று, என் மனைவி தாலி உன்னிடம் எப்படி வந்தது? என்று கேட்டுள்ளார் சண்முகம்.

அதற்கு வெங்கடேஷ், சுமதி தாலியை கழற்றி என்னிடம் கொடுத்துவிட்டு, என் கணவருடன் என்னால் வாழ முடியாது என்று சொல்லிவிட்டு, எங்கோ போய்விட்டார். எங்கே போனார் என்று எனக்கு தெரியாது என்றாராம். ஆனால், வெங்கடேஷ் இப்படி உளறி கொட்டியதுதான் சண்முகத்துக்கு சந்தேகம் அதிகரித்தது.

உடனே போலீசுக்கு சென்று, தன் சந்தேகத்தை சொல்லி உள்ளார் சண்முகம். இப்படித்தான் வெங்கடேஷ் போலீசில் சிக்கி உள்ளார். அதைத்தொடர்ந்து ஏற்காடு போலீசார் வெங்கடேஷிடம் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

மாரமங்கலம் மலைக்கிராமத்தை சேர்ந்த சுமதி என்பவருக்கு இன்ஸ்டாகிராம் மூலம் அறிமுகமானவர் அதே கிராமத்தை சேர்ந்த வெங்கடேஷ். கார் டிரைவரான சுமதியின் கணவர், அடிக்கடி வெளியூர் சென்றுவிடும் சூழலில், இவர்களுக்குள் கள்ளக்காதல் மலர்ந்துள்ளது. அந்த பகுதியிலேயே சுமார் அரை ஏக்கருக்கு காபி தோட்டம் வைத்துள்ள வெங்கடேஷ், தனது தோட்டத்திற்கு சுமதியை அடிக்கடி வரவழைத்து, கடந்த ஒரு வருட காலமாகவே உல்லாசமாக இருந்து வந்துள்ளார்.

ஆனால், கடந்த ஒரு மாத காலமாக சுமதி, வெங்கடேசனின் போனை தவிர்த்து வந்ததுடன், இன்ஸ்டாவிலும் போனை லாக் செய்துவிட்டாராம். என்னை அவாய்டு செய்துவிட்டு வேறு யாருடனாவது பழகுகிறாயா? என்று சுமதியிடம் கேட்டு தகராறு செய்துள்ளார் வெங்கடேஷ். வெங்கடேசுக்கு சந்தேகம் அதிகரித்த நிலையில், சம்பவத்தன்று சுமதியை காபி தோட்டத்திற்கு வரவழைத்துள்ளார். அங்கே இருவரும் உல்லாசமாக இருந்துள்ளனர். அதன் பிறகு போனுக்கு ஏன் லாக் போட்டுள்ளாய்? என்று கேட்டு வெங்கடேஷ் தகராறு செய்துள்ளார். சரியாக பதில் சொல்லாததால் ஆத்திரமடைந்த




ஏற்காடு காவல் நிலையம்

வெங்கடேஷ், துப்பட்டாவால் சுமதியின் கழுத்தை இறுக்கி கொன்றதுடன், அவரது கழுத்தில் போட்டிருந்த தங்க தாலியை மட்டும் கழற்றி எடுத்துள்ளார்.

சடலத்தை மறைக்க வெங்கடேஷ் பெரும் முயற்சி எடுத்துள்ளார். காபி கொட்டை கட்டும் சாக்குப்பையில் சடலத்தை கட்டி, தன்னுடைய பைக்கில் ஏற்றிக்கொண்டு, ஏற்காட்டில் இருந்து கொட்டச்சேடு வழியாக குப்பனூர் சாலையில் 6 கிலோ மீட்டர் தூரம் சென்றுள்ளார். அங்கு முனியப்பன் கோயில் அருகில் உள்ள பெரிய பள்ளத்தின் அருகில் பைக்கை நிறுத்திவிட்டு, சாக்கு மூட்டையை எடுத்து கொண்டு, பள்ளத்தில் சிறிது தூரம் இறங்கி, 600 அடி பள்ளத்தில் சுமதியின் உடலை வீசியுள்ளார்.

இதுகுறித்து போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்த வெங்கடேஷ், சுமதி மீது உயிரையே வைத்திருந்தேன். கடந்த ஒரு வருட கால உறவில், சுமதிக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேல் செலவு செய்துள்ளேன். ஆனால், வேறு ஆண்களுடன் போனில் பேசியது ஆத்திரத்தை தந்ததால்தான் கொலை செய்தேன் என்று பரபரப்பு வாக்குமூலம் தந்துள்ளார்.

அதனை தொடர்ந்து, வெங்கடேஷ் குறிப்பிட்ட இடத்தில் ஏற்காடு போலீசார், வனத்துறையினர் மற்றும் தீயணைப்புத் துறையினர் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கினர். மிகவும் பள்ளத்தாக்கான பகுதி என்பதால் கயிறு கட்டி இறங்கியவர்கள் சுமார் 600 அடி பள்ளத்தில் சாக்கு மூட்டையை கண்டுபிடித்து, சாக்கு மூட்டையில் இருந்த சுமதியின் சடலத்தை கைப்பற்றினர்.

காமம் கண்ணை மறைக்க கள்ளக்காதலியை கொன்றுவிட்டு இப்போது சிறையின் ஜன்னல் கம்பிகளை எண்ணிக்கொண்டு கண்ணீர் வடிக்கிறார் வெங்கடேஷ். ■



திருப்பூர்

செல்வநாயகம்

# குறட்டை விடும் உணவு பாதுகாப்பு துறை... கொடிகட்டி பறக்கும் போதை பொருள் விற்பனை...

**திருப்பூர் மாவட்டத்தில் வட மாநில தொழிலாளர்கள் அதிக அளவில் வாசித்து வருகின்றனர். அவர்கள்தான் குட்கா, பான்மசாலா, ஹார்ன்ஸ் போன்ற போதை பொருட்களை பயன்படுத்துவதும் அதிகம். அதனால் சிறிய அளவில் விற்பனை செய்துவந்த இளைஞர்கள், வீடுகளை வாடகைக்கு எடுத்து போதைப்பொருட்களை பதுக்கிவைத்து படுஜோராக விற்பனை செய்து வருகின்றனர்.**

திருப்பூர் மாவட்டம் முழுவதும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, ஹான்ஸ், பான் மசாலா, கூல் லிப் போன்ற தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் விற்பனை கடந்த சில மாதங்களாக எவ்வித தடையும் இன்றி ஜோராக நடைபெற்று வருகிறது. நடவடிக்கை எடுக்க வேண்டிய உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் தூங்குகிறார்களா? அல்லது சட்ட விரோதமாக போதை பொருட்கள் விற்கும் நபர்களிடம் மாமூல் பணம் வாங்கி எண்ணுகிறார்களா? என சமூக ஆர்வலர்கள் வேதனையுடன் கேள்வி எழுப்புகின்றனர்.

தமிழகத்தில் குட்கா, பான் மசாலா, மாவா, ஹான்ஸ் போன்ற புகையிலைப் பொருட்களை விற்பனை செய்தல், பதுக்கல், கடத்துதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றைத் தமிழக அரசு 2013ஆம் ஆண்டு முதல் தடை செய்துள்ளது.

மேற்படி குற்றங்களில் ஈடுபடுவோர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, வங்கி கணக்கை முடக்கி சொத்துக்களை பறிமுதல் செய்யும் அளவுக்கும் நடவடிக்கை எடுக்கலாம். மேலும், குற்றத்தில் ஈடுபடும் வாகனங்களைப் பறிமுதல் செய்து ஏலம் விடுவதற்கு உரிய சட்ட வழிவகைகள் உள்ளது. தமிழகம் முழுவதும் குட்கா பொருட்களை கடத்தும் நபர்கள் மீதும், விற்பனை செய்யும் வியாபாரிகள் மீதும் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட தடவை குட்கா பிடிபட்டால் அந்த கடைகளுக்கு உணவு பாதுகாப்பு துறை சார்பில் கடுமையான அபராதம் விதிக்கப்பட்டு, சீல் வைக்கப்பட்டு வருகிறது.

ஆனால் திருப்பூர் மாவட்டத்திலும் உணவு பாதுகாப்பு அதிகாரியாக விஜய லலிதாம்பிகை இருக்கும் வரை குட்கா ஹான்ஸ் போன்ற போதை பொருட்கள் விற்கும் ஆசாமிகள் மீது கடுமையான நடவடிக்கை தொடர்ந்தது. அதனால் சட்ட விரோதமாக போதைப்பொருட்கள் விற்கும் ஆசாமிகள் பதுங்கி, பயந்து விற்பனை செய்து வந்தனர். இந்நிலையில், விஜய லலிதாம்பிகை பணியிடமாற்றம் ஆன பிறகு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தற்போது, ரெகுலர் வாடிக்கையாளர்களுக்கு டோர் டெலிவரி, பெட்டி கடைகள், டீக்கடைகள், பேக்கரிகள்,

மளிகை கடைகள், தள்ளுவண்டி கடைகள், அரசு மதுபான கடை பார்களிலும் சர்வ சாதாரணமாக விற்கப்பட்டு வருகிறது.

பத்து ரூபாய்க்கு வாங்கப்படும் போதை பொருட்கள், 100 ரூபாய் வரை விற்பதால், அதிகப்படியான இலாபம் கிடைக்கிறது என்பதால், போதைப் பொருட்கள் விற்கும் ஆசாமிகள் பெரும் தொகையை உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு நாள்தோறும், வாரம் தோறும், மாத தோறும் என மாமூலாக அள்ளிக் கொடுத்து வருகிறார்கள். அது மட்டுமின்றி தீபாவளிக்கு போனஸ் ஆக பல லட்சம் லஞ்சம் கொடுத்துள்ளார்கள் .



இதற்கு விசுவாசமாக திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரிகள், சட்டவிரோதமாக போதை பொருள் விற்கும் ஆசாமிகளை கண்டு கொள்வதில்லை. அதனால் திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் போதை பொருள் விற்பனை குறித்து எத்தனை செய்திகள் வெளி வந்தாலும், எத்தனை புகார்கள் வந்தாலும், திருப்பூர் மாவட்டத்தில் தமிழக அரசு தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்பனை இல்லை என கூறிக்கொண்டு, கண்டுகொள்ளாமல் தூங்குவது போல் நடிக்கிறார்கள்.



செந்தில்பாலாஜி

திருப்பூர் மாவட்டம் முழுவதும் போதை பொருட்கள் எளிதாக கிடைப்பதால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளிகள், முதியவர்கள் என அனைவரும் வாங்கி பயன்படுத்தும் அவல நிலை கண்கூடாக நடைபெறுகிறது என்பதுதான் உண்மை.

அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, ஹான்ஸ், பான் மசாலா, கூல்லிப் போன்ற போதை பொருட்கள் தொடர்ந்து பயன்படுத்துவதால் வாய், தொண்டை புற்றுநோய்கள் ஏற்பட்டு உணவு கூட அருந்த முடியாமல் நீராகாரம் அருந்தி இறுதி காலத்தில், வாழும் போதே நரகத்திலிருந்து உயிர்விடும் விழிப்புணர்வு வீடியோகள், விழிப்புணர்வு படங்கள் காட்டி அரசு இளைஞர்களை நல்வழி காட்ட பயணிக்கிறது.

ஆனால், லஞ்ச பணத்திற்காக திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள், சமூக விரோதிகளை, போதை பொருள் விற்க ஊக்கமளித்து வருவது வேதனையாக உள்ளது.

திருப்பூர் மாவட்டம் முழுவதும் இது நாள் வரை பெரும்பாலும் பிடிபட்ட மொத்த வியாபாரிகள் வட மாநில நபர்கள் மட்டுமே. ஆனால், அவர்களுக்கு மூளையாக செயல்படுகின்ற கலையரசன், செல்வகுமார், அஜித், முத்து, பாண்டி, நந்து, லிங்கம், பிரேம், ராம், கதிரேசன், ரியாசுதீன்

ஆகியோர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்று சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டு கின்றனர்.

மேலும் போதை பொருட்களை பதுக்கி வைப்பதற்காக, பொங்கலூர் பகுதியில் குடோன், ஊத்துக்குளி பகுதிகள் குடோன், காலேஜ் ரோடு பகுதியில் குடோன் மற்றும் நாச்சிபாளையம் பகுதியில் முக்கிய குடோன்கள் உள்ளதாகவும் கூறுகின்றனர்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் டாக்டர் நாரணரே மனிஷ் ஷங்கர்ராவ் இளைய சமுதாயத்தினரை நலன் கருதி, நேரடியாக அதிரடி ஆய்வு செய்து, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பெட்டிக்கடை, மளிகை கடை, அரசு மதுபான பார்களில் விற்கப்படும் போதை பொருட்களை பறிமுதல் செய்து, விற்பனை செய்யும் இடங்களை சீல் வைத்து, அதிகப்படியான அபராதம் விதித்து, குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்ட விரோதமான விற்பனைக்கு உடந்தையாக இருக்கும் உணவு பாதுகாப்பு அதிகாரிகளை உடனடியாக இடமாற்றம் செய்து, நேர்மையான உணவு பாதுகாப்பு அதிகாரிகளை நியமனம் செய்ய வேண்டும் என்பதே திருப்பூர் மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

செய்வார்களா.? ■

# டி.டி.வி.தினகரனுக்கு செந்தில் பாலாஜி தூண்டில்...



**நீங்க பெரிய அறிவாளி அலெர்ட்டாரே என வரவேற்றோம். என்ன பீடிகை தூக்கலா இருக்கே என்ற அலெர்ட்டாரிடம் சீரகத் தண்ணீர் கொடுத்ததும், டைமிங்கா இருக்கே.. ஆமாம், பா.ஜ.கவில் பலருக்கும் ஜுரம் தொற்றிக் கொண்டிருக்கிறது. தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு வேட்பாளர் தேர்வு பணிகளை பா.ஜ.க மேலிடம் மிக தீவிரமாக முடுக்கி விட்டுள்ளது. அதற்காக சமீபத்தில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் சென்னைக்கு ஒரு ரகசிய விசிட் அடித்தார்.**

அதன் பிறகு தமிழக பா.ஜ.க வுக்குள் ஒருவித நடுக்கம் தொற்றி இருக்கிறது. உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒரு தெளிவான முடிவை எடுத்திருகிறார் அது 80 20 பார்முலா. அதாவது வரப்போகும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 80 சதவீதம் பேர் மாவட்ட அளவிலான நிர்வாகிகளாக தான் இருக்க வேண்டும். மாநில அளவிலான பெரிய தலைவர்களுக்கு வெறும் 20 சதவிகித இடங்கள் மட்டுமே ஒதுக்கப்படும்.




அதிர்ச்சி என்னவென்றால், அந்த வேட்பாளர்களை அமித்ஷாவே நேரடியாக தேர்வு செய்வார். யாருடைய சிபாரிசும் இங்கே செல்லுபடி ஆகாது. அந்த முடிவுக்கு பின்னால் ஒரு பெரிய அரசியல் வியூகம் இருக்கிறது. நீண்ட காலமாக கட்சிக்காக அடிமட்டத்தில் உழைத்தவர்கள், ஓட்டு சாவடி மட்டம் வரை செல்வாக்கு உள்ளவர்கள், மக்களுடன் நேரடி தொடர்பில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்க பா.ஜ.க முடிவு செய்துள்ளது. அதே நேரத்தில், தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று முறை தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள், முன்னாள் எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் மற்றும் முன்னாள் கவர்னர்களுக்கு இந்த முறை வாய்ப்பு கிடைப்பது மிக கடினம் என்று சொல்லப்படுகிறது.

குறிப்பாக குற்றப் பின்னணி உள்ளவர்கள் வேட்பாளர் பட்டியலிலேயே இடம்பெற மாட்டார்கள் என்பதில் டெல்லி தலைமை மிகக் கறாராக இருக்கிறது. இந்த திடீர் மாற்றங்களால் தமிழக பா.ஜ.கவின் மூத்த நிர்வாகிகள் பலர் கலக்கத்தில் உள்ளனர். இத்தனை வருஷம் கட்சிக்காக உழைத்தும் நமக்கு சீட்டு இல்லையா? என்ற கேள்வி கமலாலயத்தின் சுவர்களுக்குள் எதிரொலிக்கிறது. அதே சமயம், மாவட்ட அளவில் பணியாற்றும் இரண்டாம் கட்ட தலைவர்கள் இந்த முடிவை உற்சாகத்தோடு வரவேற்கிறார்கள்




# இ.பி.எஸுக்கு மோடி தரும் கேரண்டி..!

என்ற அலெர்ட்டாரிடம், டி.டி.வி, விஜய் கட்சிக்கு போய்விடுவார் என்கிறார்களே... என்றோம். அது ஒருபுறமிருக்கட்டும்.

இதில் புது ட்விஸ்ட் ஒண்ணு சொல்லவா? என தொடர்ந்தார் அலெர்ட்டார். எப்படியாவது டி.டி.வி. தினகரனை தி.மு.க கூட்டணிக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி. அ.தி.மு.க ஆட்சியால் அப்போதைய சபாநாயகர் தனபாலால் பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களில் செந்தில் பாலாஜியும் ஒருவர். செந்தில் பாலாஜி, டி.டி.வி.தினகரனுக்கு அவ்வளவு நெருக்கமாக இருந்தும், ஒரு கட்டத்தில் அ.தி.மு.க ஆட்சியில் இருந்தபோதே தி.மு.க பக்கம் சென்று விட்டார். நன்றாக கவனிக்க வேண்டும். அவர் டி.டி.வி.தினகரன் ஆதரவு என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகி, தி.மு.கவில் சேரும்போது டி.டி.வி. தினகரனை விமர்சிப்பார் என்று பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், அப்போது செந்தில் பாலாஜி, டி.டி.வி.தினகரன் சார்புடன் இருந்தேன். அவரோடு மிகவும் நெருக்கமாக இருந்தேன். அவருடைய ஆதரவு நிலைப்பாட்டில் இருந்தேன். என்னுடைய நிலைப்பாட்டை நான் மாற்றிக்கொண்டு இப்போது தி.மு.கவுக்கு வந்துவிட்டேன். அவரைப் பற்றி விமர்சிக்க என்னிடம் எதுவுமில்லை. நான் டி.டி.வி.தினகரனை பற்றி விமர்சிப்பேன் என்றெல்லாம் நீங்கள் எதிர்பாக்காதீர்கள் என்று தி.மு.கவில் சேர்ந்தபோதே டி.டி.வி.தினகரன் பற்றி எந்த ஒரு விமர்சனத்தையும் செந்தில் பாலாஜி வைக்கவில்லை. இப்போதும் டி.டி.வி.தினகரனுக்கும், செந்தில் பாலாஜிக்கும் இருக்கக்கூடிய அந்த நட்பு, அந்த உறவு அப்படியேதான் இருக்கிறது.

இந்த நிலையில், செந்தில் பாலாஜி, டி.டி.வி.தினகரனை தொடர்பு கொண்டு இனிமேல் நீங்கள் வந்த வழியை நீங்க திரும்பிப் பார்க்காதீர்கள். அ.தி.மு.க பக்கம் உங்கள் பார்வை போக வேண்டாம். நீங்கள் முன்னோக்கி வாருங்கள். நீங்கள் தி.மு.க கூட்டணிக்கு வாருங்கள். நீங்கள் இந்த ஐந்து வருட ஆட்சியை விமர்சித்து இருக்கிறீர்கள். விமர்சித்த கட்சியே தி.மு.க கூட்டணிக்கு வருகிறது என மக்களிடம் நல்ல எண்ணம் ஏற்படும். இனி உங்களுடைய அரசியல் பயணம் வெற்றிகரமாக இருக்க



அமித்ஷா



ஆர்.பி.உதவியாளர்



செல்லூர் ராஜூ

வேண்டும். எங்களோடு வந்துவிடுங்கள். நான் முதலமைச்சர் ஸ்டாலினிடம் சொல்லி அதிகபட்சம் 15 சட்டமன்ற தொகுதிகளை உங்களுக்கு பெற்று தருகிறேன்.

அது மட்டுமல்ல, டெல்டா, தென்மாவட்டங்களில் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. உங்களைப் பற்றி ஸ்டாலின் நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார் என டி.டி.வி.தினகரன் உடனான பழைய நட்பில் செந்தில் பாலாஜி தி.மு.க கூட்டணிக்கு வருமாறு தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்றார்.

ஓஹோ விஷயம் அப்படிப் போகுதா? என கேட்டதும், புதுக் கட்சி புகைச்சலை சொல்லவா என தொடர்ந்தார் அலெர்ட்டார்.

செங்கோட்டையனுக்கு த.வெ.கவில் முக்கியத்துவம் அளிக்கப்படுவதை புஸ்ஸி ஆனந்த் விரும்பவில்லை. சமீபத்திய கட்சி நிகழ்வுகளில், அதிலும் குறிப்பாக மேற்கு மண்டலத்தில் நடந்த கூட்டங்களில் விஜய்க்கு இணையாக பாதுகாப்பும், வரவேற்பும் அளிக்கப்பட்டு வருகிறது. இது புஸ்ஸிக்கு டென்சனை உருவாக்கி வருகிறது. திருப்பூரில் நடந்த ஒரு ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்ட செங்கோட்டையனுக்கு காரில் இறங்கியதில் இருந்து மண்டபத்தில் நுழைந்து மேடையில் அமர வைக்கிற வரை இருபுறமும் இசட் பிளஸ் பாதுகாப்பு வளையம் போல அமைத்து, ஆளுயர மாலைகள் எல்லாம் அணிவித்து அழைத்து சென்று சீட்டில் அமர வைத்தார்கள். இதனால் புல்லரித்து போன செங்கோட்டையன் தன்னுடைய உடலில் ஓடும் ஒவ்வொரு சொட்டு ரத்தமும் இனி விஜய்க்கு தான் என்று புகழ்ந்து தள்ளியதோடு கண் கலங்கினார். இந்த வீடியோ காட்சிகளை எல்லாம் பார்த்ததும் புஸ்ஸி ஆனந்துக்கு பிரசர் அதிகமாகிவிட்டதாம்.

இதே நிலை நீடித்தால் கட்சியில் தன்னுடைய முக்கியத்துவம் குறைந்துவிடும் என்பதோடு, விஜய்யின் குட் புக்கில் செங்கோட்டையன் இடம் பிடித்து விடுவாரோ என்ற பயமும் புஸ்ஸிக்கு வந்து விட்டதாம். அதனால், மேற்கு மண்டலத்தில் உள்ள தனது ஆதரவாளர்களை தொடர்பு கொண்டு, இத்தனை நாட்கள் எனக்கு இந்த மாதிரி ஆரவாரம், வரவேற்பு கொடுத்திருக்கிறீர்களா? இப்ப வந்த ஆளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன் கொடுக்கறீங்க? என கேள்வி எழுப்பினாராம் புஸ்ஸி. அதனால் விரைவில் புஸ்ஸிக்கும், செங்கோட்டையனுக்கும் பனிப்போர் தொடங்க வாய்ப்பு இருக்கிறது என்றார்.

புதுக் கட்சியில் மட்டுமா? தூங்காநகரத்திலும் அ.தி.மு.கவில் பெரும் புகைச்சமே என்றதும், ஆமாம். மதுரையில் அ.தி.மு.க சுக்கு நூறாக உடைந்து பலமற்று கிடக்கிறது. ஆர்.பி.உதயகுமார், செல்லூர் ராஜூ, ராஜன் செல்லப்பா என பவரான மூன்று பேர் மாவட்டப் பொறுப்பில் இருந்தும், மூவருக்குள்ளும் ஏகப்பட்ட லடாய். இதில் டாக்டர் சரவணன் தன்னை முன்னிலைப்படுத்தி நான்காவது பவராக வளர்ந்து வருவதில் இந்த மும்மூர்த்திகளுக்கும் கடும் ஆத்திரம். வரும் தேர்தலில் கூட்டணிக்கு தாரை வார்த்தது போக தங்களுக்கே வேண்டிய தொகுதி கிடைக்குமோ, கிடைக்காதோ என்கிற ஆத்திரம் மேலோங்கி இருக்க, இவர்களுக்கு போட்டியாக டாக்டர் சரவணனும் இருப்பதால் இவரைக் கழற்றி விடும் காரியங்களில் கூடுதல் கவனம் காட்டி வருகிறார்கள். சமீபத்தில் மதுரை நகர் உள்ளாட்சி நிர்வாகத்தைக் கண்டித்து இ.பி.எஸ் அறிவித்த போராட்டத்திற்கென ஆட்களைத் திரட்டிக் கொண்டு போனார் டாக்டர் சரவணன்.


இதைக்கண்ட மூவரும், மேடையில் அவரை



ராஜன் செல்லப்பா



செங்கோட்டையன்



புஸ்ஸி ஆனந்த்

ஏறவிடாமல் பார்த்துக் கொண்டதோடு, மருந்துக்கும் கூட சரவணனின் பெயரை மைக்கில் உச்சரிக்கவில்லை. வேறு வழியின்றி அவமானத்தோடு, கூட்டத்தோடு கூட்டமாக தன் ஆதரவாளர்களுடன் நின்று டாக்டர் சரவணன் போட்டோ எடுத்து சமூக வலைத்தளங்களில் போட்டு, தான் போராட்டத்தில் பங்கெடுத்ததைக் காட்டிக்கொண்டார். இன்னும் இந்த நிராகரிப்பை ஏற்க முடியாமல், பார்க்கிற அத்தனை பேரிடமும் அ.தி.மு.கவுக்கு எவ்வளவோ உழைத்தும் உள்ளூரில் புறக்கணித்தால் எப்படி நான் அரசியலில் வளர்வதென டாக்டர் சரவணன் புலம்பித் தள்ளி வருகிறார் என்றவரிடம், அ.தி.மு.க தேர்தல் அறிக்கையை ஆரம்பித்து விட்டதாமே என்றதும், வேகமாக தலையாட்டி, எல்லாம் பா.ஜ.க கொடுத்துள்ள தெம்புதான் எனத் தொடர்ந்தார் அலெர்ட்டார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில், பல்வேறு வேறு புதிய அறிவிப்புகளை தேர்தல் வாக்குறுதிகளாக வெளியிடுங்கள். அதை நிறைவேற்ற பிரதமர் மோடி அரசு உதவி செய்யும் எனவும் அ.தி.மு.க தலைமைக்கு பா.ஜ.க மேலிடம் ஆலோசனை வழங்கி உள்ளது. கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலின்போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என தி.மு.க தேர்தல் வாக்குறுதி அளித்தது. தேர்தலில் வெற்றி பெற்று தி.மு.க ஆட்சி அமைக்க இந்த வாக்குறுதி முக்கிய காரணமாக இருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளுக்கு பிறகு, 2023 செப்டம்பர் மாதம் தான் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது.

அனைத்து மகளிருக்கும் என வாக்குறுதி அளித் துவிட்டு ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு தான் வழங்கப்படுகிறது. வாக்குறுதிகளை தி.மு.க அரசு முழுதுமாக நிறைவேற்றாததால், அக்கட்சி மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். அதேவேளை, மஹாராஷ்டிரா, மத்திய பிரதேசம் என பா.ஜ.க ஆளும் மாநிலங்களில், தமிழகத்தை விட கூடுதலாக மகளிருக்கு உதவித்தொகை மாதந்தோறும் வழங்கப்படுகிறது. தொழில் துவங்க கடன் உட்பட பல திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

இது தொடர்பான அறிவிப்புகளை, பா.ஜ.க தரப்பு தேர்தலுக்கு முன் வாக்குறுதிகளாக அறிவித்ததாலேயே, அந்த மாநிலங்களில் கூடுதல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றனர். பிரதமராக மோடி மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார். இதற்கு மக்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையே பிரதான காரணம். மத்தியில் ஸ்திரத்தன்மையோடு ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால், பிரதமர் மோடியால் நினைத்த மாத்திரத்தில் நிதி உள்ளிட்ட பல விஷயங்களில், எந்த மாநிலத்துக்கும் உதவிகளை செய்ய முடியும்.

எனவே, வரும் தமிழக சட்டசபை தேர்தலில், மகளிருக்கு, மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாய் நிதியுதவி, தாலிக்கு தங்கம், தொகுப்பூதிய பணி நிரந்தரம் உட்பட மக்கள் பயன்பெறும் வகையில் வாக்குறுதிகளை வெளியிடுங்கள். அதற்கான நிதி ஆதாரம் குறித்து கவலையேப்பட வேண்டாம். அது தொடர்பாக யார் விமர்சனம் செய்தாலும், அ.தி.மு.க அளிக்கும் வாக்குறுதிகளுக்கு பிரதமர் மோடி கேரண்டி அளித்துள்ளார். மத்திய அரசிடம் இருந்து நிதியுதவி பெற்று வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்று சொல்லுங்கள் என நம்பிக்கையோடு அ.தி.மு.கவுக்கு பூஸ்டு கொடுத்து வருகிறது பா.ஜ.க என்று முடித்ததும், உனக்கே இது ஓவரா தெரியல.. என டி.வியில் கவுண்டமணி டயலாக் ஓடியது. குபீரென சிரித்து விட்டு வெளியேறினார் அலெர்ட்டார். ■

# பால் கூட்டுறவு சங்கத்தில் தொடரும் பகல் கொள்ளை...

# சங்க செயலாளரை பதவிநீக்கம் செய்யாதது ஏன்..?

## ● குமுறும் பால் முகவர்கள்

**ஊக்கத்தொகை, போனஸ் வாக்குறுதி என்னாச்சு? கையாடலில் ஈடுபடும் சங்க செயலாளரை டிஸ்மிஸ் செய்யாது ஏன் ? என ஆவின் இணை ஆணையாளர்மற்றும் கலெக்டரிடம் மீண்டும் புகார் மனு நீட்டி இருக்கிறார்கள் காவேரிபட்டு பால் முகவர்கள்.**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த. காவேரிப்பட்டு கிராமத்தில் TPD 1180 பால் கூட்டுறவு சங்கம் இயங்கி வருகிறது. அங்கு 2019 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கிய ஊக்கத்தொகை மற்றும் கறவைப்பசு கடனுக்கான தவணைத் தொகை ஆகியவற்றில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை செயலாளர் மோகன் முறைகேடாக சுருட்டியதால் சஸ்பெண்ட் செய்யப்பட்டு 23.4.2021 ல், அன்றைய ஆவின் மாவட்ட (வேலூர்) துணை பதிவாளர் தயவில், தண்ட தீர்வு என்ற பெயரில் ரூபாய் 52 ஆயிரத்து 640 கட்டிவிட்டு, செயலாளராக தொடர்ந்து வருகிறார்.

அதேபோல், 2022 ஆண்டு மட்டும் சுமார் 8 லட்சத்து 17 ஆயிரத்து 709 ரூபாய் லாபத்தில் இயங்கிய காவேரிபட்டு பால் கூட்டுறவு சங்கத்தில், 2023 மற்றும் 2024 ஆண்டு வரை, சுமார் 17 லட்சம் ரூபாய் மோகன் கையாடல்? செய்திருப்பதாக, பால் உற்பத்தியாளர்கள் ஆர்.டி.ஐ அறிக்கையோடு கடந்த அக்டோபர் 8ந்ததேதி கலெக்டரிடம் புகார் அளித்திருந்தனர்.

இதுகுறித்து, லாபத்தில் இயங்கிய பால் சங்கம்..

சங்கத்துக்கு பால் ஊற்றிய செயலாளர்.. காப்பாற்றக்கோரி கலெக்டரிடம் கதறல்.!

என்ற தலைப்பில் செப்டம்பர் 16 ந்தேதி நமது பரபரப்பு செய்தி இதழில் வெளியீட்டிருந்தோம்.

அதனைத்தொடர்ந்து,முறைகேட்டில் ஈடுபட்ட செயலாளர் மோகனிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டபோது, ரூபாய் 7 லட்சத்து 50 ஆயிரம் செலுத்திவிடுவதாக கூறியவர், கடந்த மாதம் திடீரென பூச்சி மருந்தை குடித்துவிட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.



அமைச்சர் மனோ தங்கராஜ்

பின்னர், முறைகேட்டில் சுருட்டிய 17 லட்சத்தில் 5 லட்சம் ரூபாயை தண்ட தீர்வு என்ற பெயரில் கட்டிவிட்டு, தற்போது வரை



கலெக்டரிடம் புகார்

செயலாளராக தொடர்ந்துக் கொண்டிருக்கும் மோகனுக்கு, கடந்த மாதம் புத்துக்கோயிலில் நடைப்பெற்ற மாநில பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க ஊழியர்கள் மாநாட்டில், மாவட்ட துணைத் தலைவர் பதவியை கொடுத்து அழகு பார்த்து இருக்கிறார்கள் அதன் நிர்வாகிகள்.

இந்நிலையில், 2025 ஆண்டும் சுமார் 53 ஆயிரம் லிட்டர் வரை பால் காணாமல் போனதாக கணக்கு காட்டிய மோகன் மீது, நடவடிக்கை எடுக்க கோரியும், போனஸ், ஊக்கத்தொகை வழங்காததை கண்டித்தும், பால் உற்பத்தி பால்வள மேம்பாட்டு இணை இயக்குநர் மற்றும், கலெக்டரிடம் இந்த பகல் கொள்ளை குறித்து மீண்டும் புகார் அளித்திருக்கிறார்கள் காவேரிப்பட்டு பால் உற்பத்தியாளர்கள்.

இது தொடர்பாக, பால் முகவர் இளவரசு என்பவரிடம் பேசினோம். அப்போது அவர், வருடம் தோறும், பொங்கல் போனஸாக, ஆண்டின் டிசம்பர் மாத கடைசியில் ஒரு லிட்டருக்கு 30 பைசா வீதம் ஊக்கத்தொகை வழங்குவது வழக்கம். கடந்த 2022 முதல் 2025 வரை, சங்கத்தில் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக வழக்கமான பல்லவியை பாடி, ஊக்கத்தொகை மற்றும் போனஸ் வழங்காமல் இந்த ஆண்டும் ஏமாற்றி விட்டார்கள்.

கடந்த 32 ஆண்டுகளாக தொடர்ந்து லாபத்தை ஈட்டிவந்த இந்த சங்கம், திடீரென திவாலானது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கேட்டால் பால் குளிரூட்டும் நிலையத்திலிருந்தே அனுப்பும் பாலின் அளவைவிட குறைவாக அனுப்பி வைப்பதாக கூறுகிறார்.

ஒன்று கையாடல் செய்து இருக்க வேண்டும். இல்லை நிர்வாகம் செய்ய தகுதி இல்லாதவராக இருக்கனும். இந்த மோகன் பொருப்பேற்றதிலிருந்து கிட்டத்தட்ட ரூபாய் 18 லட்சத்து 50 ஆயிரம் வரை சுருட்டியது விசாரணைகளுக்கு பிறகு தெரியவந்ததால், 5 லட்சத்து 52 ஆயிரத்து 640 ரூபாய் தண்ட தீர்வு என்ற பெயரில் இருமுறை சங்கத்தின் வங்கிக் கணக்கில் பணத்தை செலுத்தி இருக்கிறார்.

மோகன் கட்டிய பணத்திலாவது போனஸ் மற்றும்



செயலாளர் மோகன்

ஊக்கத்தொகையினை வழங்கி இருக்க வேண்டும். இந்த ஆண்டு டிசம்பர் ஊக்கத்தொகையினை வழங்குவார்களா? என்று தெரியவில்லை. போனஸ் வழங்காமல், ஆவின் பொருட்களை ( நெய், கோவா, மைசூர்பா ) செப்டம்பர் மற்றும் அக்டோபர் இருமுறை கட்டாயப்படுத்தி எங்களிடமே விலைக்கு விற்றார் செயலாளர் மோகன். இந்த கொடுமையை எங்க போய் சொல்வது.



இளவரசு

இது சம்பந்தமாக திருப்பத்தூர் இ.ஓ சசிகுமாரிடம் புகார் அனுப்பி கேட்டதற்கு, நாங்கள் அக்டோபர் மாதத்தில் மட்டும் தான் விற்பனை செய்ய சொல்லி கொடுத்தோம். உங்கள் செயலாளர் லாபம் பார்க்க, முன்னதாகவே ஒருமுறை விற்றிருக்கலாம் என்கிறார்.

பணத்தை சுருட்டுவது அதிலொரு பங்கை தண்ட தீர்வு பெயரில் கட்டி தப்பித்துக் கொள்வது என்பது மோகனின் வாடிக்கையாகிபோனது.

தமிழ்நாடு முழுவதுமுள்ள சங்கங்கள் இப்படிதான் செயல்படுகிறது. என்னை மட்டுமே ஏன் குறிவைத்து நடவடிக்கை எடுக்குறிங்க என்று மோகன் பதிவாளருக்கு கடிதம் எழுதி நீயாயம் கேட்கிறாராம். இவர் தப்பிக்க மற்ற சங்கங்களும் இப்படிதான் செயல்படுவதாக நியாயம் கற்பிக்கிறார்.

இந்த 2025 ஆண்டும் சுமார் 53 ஆயிரம் லிட்டர் பால் காணாமல் போயிருப்பதாகவும், அதன் மதிப்பு ரூபாய் 17 லட்சம் என்று, பதிவாளருக்கு அனுப்பி வைக்கும் தினசரி கொள்முதல் கணக்கில் தெரியப்படுத்தி இருக்கிறாராம்என தலையில் அடித்துக் கொண்டார்.

அப்போது, அருகிலிருந்த பெரிய கம்யம்பட்டு முகவர் கனகராஜ் குறுக்கிட்டு, திருப்பத்தூர்,வேலூர், ராணிப்பேட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து, வேலூர் பொய்கையில் உள்ள ஆவின் ஞிஸி சித்ரா தான் பொருப்பு வகித்து வருகிறார்.

மாவட்டம் பிரித்து 7 ஆண்டுகள் ஆகியும் தனி ஞிஸி அலுவலர் நியமிக்கவில்லை. திருப்பத்தூருக்கு தனி அலுவலர் நியமித்தால் பாதி பிரச்சினை தீரும். திருப்பத்தூர் மாவட்டத்தில், 56 பால் கூட்டுறவு சொசைட்டிகளும், 8 பால் குளிரூட்டும் நிலையங்களும் உள்ளன. 2017 வரை சுமார் ரூபாய் 35 லட்சம் வரை இருப்பு இருந்த இந்த சொசைட்டியை பார்க்கும் போது, இளவரசு சொல்லும் கணக்கை சேர்த்த பார்த்தால், காவேரிபட்டு சங்கம் முழுவதும் துடைத்தெறியப்பட்டுவிடுமோ என்ற பயம் எங்களுக்கு வந்துவிட்டது.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு, திருச்சி மணப்பாறை பால் கூட்டுறவு சங்கத்தில் தண்ணீர் கலந்ததுக்கே ஊழியர் ஒருவர் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். ஆனால், காவேரிபட்டு செயலாளர் மோகன் லட்சக்கணக்கான பணத்தை சுருட்டியது தெரியவந்தும், மோகன் செயலாளராக தொடர்வது அதிர்ச்சியாக உள்ளது. எனவே அமைச்சர் மனோ தங்கராஜ் மற்றும் ஆவின் ஆணையாளர்கள் தலையிட்டு, சங்கத்தை காப்பாற்ற வேண்டும் என்றார்.

புகார் குறித்து ஆவின் கூடுதல் பால் ஆணையாளர் பிரமிளா அவர்களை தொடர்பு கொண்டு கேட்டதற்கு,*

அதுக்குறித்து எனக்கும் புகார் மனு வந்திருக்குங்க. இரண்டுமுறை தண்ட தீர்வு கட்டிவிட்டு பணியில் தொடர்கிறாரா செயலாளர்.? என கேட்டறிந்தவர்,

பால் முகவர்களுக்கு இந்த ஆண்டும் ஊக்கத்தொகை, போனஸ் வழங்காதது குறித்த கேள்விக்கு.? நிச்சயமாக மீண்டும் ஒரு விசாரணை நடத்திவிட்டு உரிய நடவடிக்கை எடக்கப்படும் என்றார்.

நஷ்டத்தை காரணம் காட்டி, ஊக்கத்தொகை, போனஸ் வழங்காமல், பால் முகவர்களை காவேரிப்பட்டு பால் கூட்டுறவு சங்கம் ஏமாற்றுவது ஏற்புடையதல்ல. அவர்களிடமே ஆவின் பொருட்களை விற்று லாபம் பார்ப்பது கேலிக்கூத்து செயல். தொடர்ந்து கையாடலில் ஈடுபட்டு வரும் செயலாளர் மோகன் மீது ஆவின் ஆணையாளர், பால் வளத்துறை அமைச்சர் ஆகியோர் தலையிட்டு கடும் நடவடிக்கை தேவை என காவேரிபட்டு பால் உற்பத்தியாளர்கள் உறுதியாக இருக்கின்றனர்.

நடவடிக்கை எடுப்பாரா அமைச்சர் மனோ தங்கராஜ்.? பொறுத்திருந்து பார்ப்போம். ■

வாணியம்பாடி
மகேஸ்வரன்

# சளைக்காமல் சமபந்தி விருந்து... உற்றுநோக்கும் அறிவாலயம்...

## அசத்தும் தி.மு.க ஒன்றிய செயலாளர்

**ஆலயங்களில் நடத்தப்படும் சமபந்தி விருந்துக்கு அடுத்தபடியாக, ஆலங்காயம் தி.மு.க நிர்வாகி நடத்தி வரும் சமபந்தி விருந்துதான் மிகப்பெரிய சமபந்தி விருந்தாக பார்க்கப்படுது.**

தீண்டாமை ஒழிப்பு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கான அடையாளமாக, சமபந்தி சமத்துவ விருந்து நடத்தப்பட்டுவது வழக்கம். அந்த வகையில் கடந்த 15 வருடங்களாக ஆலங்காயம் தி.மு.க ஒன்றியம் சார்பில், வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட பொதுமக்களுக்கும், தி.மு.க தொண்டர்களுக்கும் சமத்துவ விருந்தளித்து புத்தாண்டு கொண்டாடி, தி.மு.க தலைமை மற்றும் பல்வேறு தரப்பினரின் கவனத்தை பெற்றிருக்கிறார் வி.எஸ்.ஞானவேலன்.

திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், வழக்கமாக வாணியம்பாடி அடுத்த மதனாஞ் சேரி தளபதி ஸ்டாலின் அறிவாலயத்தில், கடந்த ஜனவரி1 புத்தாண்டு தினத்தன்று விருந்து வைக்க, 31 ஆம் தேதி நள்ளிரவு முதலே தயார்படுத்திக் கொண்டிருந்தார். விடிந்ததும் புத்தாண்டு வாழ்த்துக்களை பறிமாற சாதி மதங்கள் கடந்து, பெரும் திரளான பொது ஜனங்கள், கட்சி தொண்டர்கள் என சாரை சாரையாக வந்து வரிசைக் கட்டி நின்றனர். இவர்களோடு தி.மு.க மாநில, மாவட்ட பிரதிநிதிகளும் வந்து குவிந்தனர்.

இந்த சந்திப்பின் போது, விருந்தினர்களும், ஒன்றிய செயலாளர் ஞானவேலனும், பொன்னாடைகளை ஒருவருக்கு ஒருவர் அணிவித்து வாழ்த்துக்களை பறிமாறிக் கொண்டனர். இந்த நிகழ்வு சுமார் 7 மணி நேரம் நீடித்தது. அதுவரைக்கும் சளைக்காமல் மரியாதை செய்து, இந்த ஆண்டுக்கான காலண்டரையும் வழங்கினார் ஞானவேலன்.

அதன்பின்னர வந்திருந்தவர்களுக்காக பறிமாறப்பட்ட விருந்தில் நாமும் பங்கேற்றோம். எத்தனை முறை கேட்டாலும் சிக்கன் பிரியாணி அள்ளி வைத்து, அதனோடு சில்லி சிக்கன், கத்திரிக்காய் கூட்டு, தயிர் பச்சடி, பன்னீர் ஜாமுன், பால் பாயசம், வாழைப்பழம் என தலைவாழை இலை முழுக்க பந்தியில் இடம்பெற்றது. மேலும் சாப்பிட்டு முடித்த கையோடு, ஏலக்காய் டீ, புரூட்ஸ் சாலட், ஐஸ்கிரீம், ஸ்வீட் பீடா, வாட்டர் பாட்டில் என 15 க்கும் மேற்பட்டவை வழங்கப்பட்டது.

ஒரு கட்டத்தில், பிற்பகல் இரண்டு மணியளவில், கட்டுக்கடங்காத கூட்டம் கூடியதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டதையடுத்து, பணியில் ஈடுபட்டிருந்த 100 க்கும் மேற்பட்ட போலீசார்களோடு கூடுதல் போலீசார் வரவழைக்கப்பட்டு, காவல்துறையினர் கூட்டத்தை கட்டுப்படுத்தினர்.

சமபந்தி நடந்துக்கொண்டிருக்கும்போதே, ஒருபுறம் கரகாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், தாரை தப்பட்டை என தமிழர்களின் கலாச்சார கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மறுபுறம் இன்னிசை கச்சேரியும் கலை கட்டியது. தி.மு.க கொள்கை தொடர்புடைய பாடல்களை பாடிக்கொண்டிருந்த போது, திடிரென பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, முதல்வர் ஸ்டாலின் போன்று தத்ரூபமாக தோற்றம் கொண்டவர்கள் மேடையில் தோன்றினர். அப்போது ஓடி வருகிறான் உதயசூரியன் பாடல் பாடப்பட்டாதால் தொண்டர்கள் ஆரவாரம் செய்து, துள்ளி மகிழ்ந்தனர். இந்த நிகழ்வு சமபந்தி போலவே அதிக கவனம் பெற்றது.

சமபந்தி விருந்தில் பங்கேற்ற வளையாம்பட்டு பகுதியை சேர்ந்த ரபீக் என்ற இஸ்லாமிய பெரியவர், சமபந்தி விருந்து குறித்து மிகப்



சமபந்தி விருந்து

பெருமையாக பேசினார். அப்போது அவர், நான் ஆரம்பித்திலிருந்தே இந்த விருந்தில் பங்கேற்று வருகிறேன். ஆரம்பக்கட்டத்தில் ஐந்தாயிரம் ஜனங்கள் வரை கலந்துக் கொண்டனர். இப்பவெல்லாம் 15ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று வருகின்றனர். இந்த சமபந்தியில் பங்கேற்பதை நான் மிகவும் பெருமையாக நினைப்பேன். ஆண்டு இறுதியான டிசம்பர் மாதம் பிறந்தாலே எங்கள் பகுதியில் தம்பி ஞானவேலன் நடத்தி வரும் புத்தாண்டு சமபந்தி விருந்துதான் பேச்சு வழக்காக ஓடிக்கொண்டிருக்கும். புத்தாண்டு அன்று காலையிலே கழக கரை வேட்டி அணிந்து கொண்டு புறப்பட்டு வந்திடுவேன். எங்கள் பகுதியில் இருந்து 200க்கும் மேற்பட்டோர் வந்திருக்கிறோம். போன முறை சாயங்காலம் வந்தேன் பிரியாணி முடிந்துபோனதால், அடுத்து தயார் செய்யப்பட்ட சுட சுட சாதம் கோழி கறி குழம்பு கிடைத்தது. அதனால் இந்த ஆண்டு காலையிலே ஆஜாராகிட்டோம். வாணியம்பாடி, ஆம்பூர், ஆலங்காயம், திருப்பத்தூர், சென்னை என எங்கெங்கிருந்தோ வந்து குவிந்து விடுவார்கள்.

எங்க ஒன்றிய செயலாளர் தம்பி ஞானவேலன் நல்ல மனம் படைத்தவர். எளிமைக்கு சொந்தக்காரர். உதவும் குணம் கொண்டவர். எந்த உதவினு கேட்டாலும் அஞ்சாமல் செய்து விடுவார். எங்க பெண் பிள்ளைகள் படிப்பு செலவுக்கு கூட உதவி இருக்கிறார். எங்கள் பகுதி அருகிலுள்ள தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வாங்கி கொடுத்துள்ளார். எத்தனையோ பேரின் மருத்துவ செலவிற்கு உதவி இருக்கிறார். தம்பி ஞானவேலன் மனைவி மாவட்ட துணை சேர்மனாக இருப்பதால், சாலை வசதி இல்லாத ஊருக்கெல்லாம் புதிய சாலைகள் அமைத்து கொடுத்துள்ளார். இப்படி பலவகையில் வாணியம்பாடி மக்களிடம் செல்வாக்கு படைத்த ஞானவேலன் வாணியம்பாடி தொகுதிக்கு எம்.எல்.ஏ வாகி, தொகுதி முழுக்க சேவை செய்ய வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன். இதே போல் பல இடங்களில் சமபந்தி விருந்தை அவர் தொடர்ந்து நடத்த வேண்டும். சமூகவாழ்வில் பிறரது நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளவும், பிறர் மீது கொண்டுள்ள நேசத்தை வெளிப்படுத்தினால், சகோதரத்துவத்தை வளர்த்தெடுக்கும். அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகிறவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும் என



ஞானவேல்

Owned, Published and Printed by: S.P. RAMANATHAN, at No. 3-224/1, Musuvanuthu, Dindigul, Tamilnadu – 624619. and Printed at CHENNAI OFFSET PRINTERS, No. 19/1,21/2, Kitabathkhan Bahadur Street, Ellis Road, Chennai – 600002. EDITOR: S.P. RAMANATHAN
All rights reserved. Legal jurisdiction Chennai city court only. Nothing in Paraparappu Cheithi is intended to defame any person. But expressed in faith, pursuit of truth and public good.









நபி அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த சமபந்தி விருந்தோம்பல் மூலம் தொண்டர்களுக்கு கொள்கை பிடிப்பு ஏற்படுகிறது. மக்களிடையே மத நல்லிணக்கமும் உண்டாகிறது என்றார்.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வே, சமபந்தி விருந்துதான். இதற்காக வாணியம்பாடி தொகுதி முழுவதுமுள்ள 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சாதி, மதங்கள் கடந்து, கட்சி பாகுபாடின்றி விருந்தில் பங்கேற்றுவிட்டு சென்றிருப்பதாகவும், இன்று நடைப்பெற்ற சமபந்தி விருந்தை தி.மு.க தலைமை உன்னிப்பாக கவனித்ததாகவும், உளவுத்துறையினர் கூறுகின்றனர்.

இந்த விருந்துக்காக சுமார் 2 ஆயிரத்து 100 கிலோ கோழிக்கறி, டன் கணக்கான பாசுமதி அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான செலவை ஒன்றிய செயலாளர் வி.எஸ். ஞானவேலன் தனது சொந்த பணத்திலிருந்து பல கோடிகளை செலவழித்து வருகிறார், கடந்த 15 வருடங்களாக நடத்தப்படும் இந்த விருந்துகான செலவு ரூபாய் 20 கோடிக்கும் மேலிருக்கும் என்கிறார் கோனாமேடு பகுதியை சேர்ந்த தி.மு.க பிரமுகர்.

தினந்தோறும் ஆலயங்களில் நடத்தப்படும் பிரமாண்டமான சமபந்தி விருந்தில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று வருவதற்கு அடுத்து, 15 வருடங்களாக ஆலங்காயம் தி.மு.க ஒன்றிய செயலாளர் ஞானவேலன் நடத்தி வரும் சமபந்தி விருந்துதான் பிரமாண்டமானது என்கிறனர் பொதுமக்கள். ■


வாசகர்கள், விளம்பரதாரர்கள், பணியாளர்கள், நிருபர்கள்,
ஆசிரியர் குழுவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும்...
இனிய
தமிழர்
திருநாள்
நல்வாழ்த்துகள்..!
Happy
PONGAL
S.P.இராமநாதன்
வெளியிட்டாளர் & ஆசிரியர்
ஜோதி சங்கர்.A
இணையாசிரியர்
பரபரப்பு செய்தி
ஆசிரியர் மற்றும் நிருபர் குழு